# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 05 வியாழக்கிழமை (17-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:71


# முதலில் மோதலுக்கு முடிவு; அதன் பின்பே நிரந்தரத் தீர்வு!

## சந்திரிகாவை சந்திக்க முன்னர் நோர்வே அமைச்சர் தகவல்

கொழும்பு,பெப்ரவரி17

**"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான - நேர்மையான - தீர்வு கிட்ட வேண்டுமானால் ஆரம்பத்தில் இருதரப்பும் மோதல்களுக்கு முடிவு காணவேண்டும்".**

**- நேற்று கொழும்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்கு முன்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

நேற்றுக் காலை கொழும்பு வந்ததும் அவர் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஓர் ஏற்பாட்டாளராகச் செயற்படுவதற்கு நோர்வே அரசு முடிவு செய்துள்ளது.

சமாதான முயற்சியில் இலங்கை ஜனாதிபதி அர்ப்பணிப்பு உடையவராக உள்ளார். எனவே மோதல்களுக்கு முடிவு காண்பதற்காக சாத்தியமான சகலவற்றையும் செய்வதற்கு நோர்வே தயாராக உள்ளது.

லண்டனில் புலிகள் பிரதிநிதிகளுடன் நான் நடத்திய பேச்சுக்கள் எதிர்காலத்தில் சமாதான முயற்சிக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

நாட்டின் வளர்ச்சிக்கு இந்தப் போராட்டம் பெரும் இடையூறாகும் - என்றார்.

ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நோர்வே அரசு அளித்துபங்களிப்பை அவர் நினைவு கூர்ந்தார்.

## தீர்வு எட்டுவது இலகுவல்ல; எனினும் பேச்சுத் தொடரும்

### புறப்படமுன் நோர்வே அமைச்சர் தகவல்

கொழும்பு, பெப்.17

"தீர்வு காண்பது எளிதாகத் தோன்றவில்லை என்றாலும் பேச்சுக்கள் தொடரும்"

- நோர்வே வெளிவிவகார அமைச்சர் நேற்றிரவு இலங்கையை விட்டுப் புறப்பட முன்னர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்திய பின்னர் அவர் இக்கருத்தை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுக்காலை 6.30 மணிக்கு கொழும்பு வந்த நோர்வே அமைச்சர் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 12.30 மணி வரை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் பின்னர் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சு நடத்தினார்.

பின்னர் நேற்று மாலையில் நீண்ட நேரம் ஜனாதிபதியுடன் அவர் விரிவாக உரையாடினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புப் பற்றிய விவரங்கள் அடங்கிய உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று முன்னிரவுவரை வெளியாகவில்லை.

நேற்றிரவு அமைச்சர் கதிர்காமர் அளித்த விருந்துபசாரத்தை முடித்துக்கொண்டு தன்னுடன் வருகை தந்த இரு அதிகாரிகளுடனும் அவர் நாடு திரும்பினார். (உ-3-5-8-6)

## ஆனையிறவில் கடுஞ்சமர்! இருதரப்பிலும் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம்,பெப்.17

ஆனையிறவுத் தளத்தில் நிலைகொண்டுள்ள படையினர் மீது அதன் தெற்குப்புறப் பக்கமாக நேற்று விடியற்காலை 4 மணிக்கு விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலை அடுத்து அங்கு இரு தரப்புக்கும் இடையே கடுஞ்சமர் வெடித்தது. இச்சமரில் இரு தரப்பிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் ஆனையிறவுக்குத் தெற்கே உள்ள முன்னரங்க நிலைகளில் ஏழு பங்கர்களை படையினர் இழந்து பின்வாங்கினர் என்றும் -

பின்னர் நேற்றுக் காலையில் விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதல்களுடன் மேலதிக துருப்புக்கள் அங்கு அனுப்பப்பட்டு இழக்கப்பட்ட பங்கர்கள் மீண்டும் மீட்கப்பட்டதாகவும் -

அரசுப் படை வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தச் சமரில் ஏழு படையினர் உயிரிழந்ததாகவும் காயமடைந்த 14படையினர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாகவும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இழக்கப்பட்ட பங்கர்கள் மீட்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 12 சடலங்களை புலிகளிடம் அனுப்பும் முயற்சி தோல்வி

கொழும்பு,பெப்.17

நேற்று ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையின் போது தாம் கைப்பற்றிய புலிகளின் 12 சடலங்களையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக வன்னியில் உள்ள புலிகளின் தலைமைப்பீடத்திடம் ஒப்படைக்கத் தாங்கள் எடுத்த முயற்சி பயன்தரவில்லை என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக செஞ்சிலுவை அதிகாரிகளுடன் தாங்கள் தொடர்பு கொண்டபோது சடலங்களை கையேற்க அவர்கள் மறுத்துவிட்டதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சடலங்களைக் கொண்டு செல்வது தொடர்பான பிரச்சினைகள் இருப்பதால் அவற்றை தங்களால் பொறுப்பேற்கமுடியாது போய்விட்டது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் ஒப்புக்கொண்டனர். (உ-3-5-8)

## உண்ணாவிரதம் இருக்கும் படையினரின் உறவினர்கள் வன்னிக்குச் செல்ல அனுமதி

### விடுதலைப்புலிகள் அறிவிப்பு

வன்னியில் புலிகளின் தடுப்புக் காவலில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் போர்க் கைதிகளை பார்வையிடுவதற்காக வன்னிக்கு அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி அளித்துள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலியில் இந்த அனுமதி தொடர்பான அறிவித்தலை நேற்று விடுதலைப் புலிகள் வெளியிட்டனர்.

தம்மை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி கடந்த 19ஆம் திகதி புதுக்குடியிருப்புப் பகுதியில் - விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் - கடற்படை மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 15 போர்க் கைதிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்று ஏழாவது நாளாக உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெற்றதாகவும் -

உண்ணாவிரதிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் தினமும் சென்று பார்வையிடுவதாகவும்-

அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை உண்ணாவிரதம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால்

## சாவதைத் தவிர எமக்கு வேறு வழி ஏதும் இல்லை

### கைதிகளில் ஒருவர் கூறுகிறார்

வவுனியா,பெப்.17

"எமது விடுதலை தொடர்பாக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்காதுவிட்டால் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்து சாவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை"

இவ்வாறு புதுக்குடியிருப்பில் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் போர்க்கைதிகளில் ஒருவரான - 'சாகரவர்த்தனா' கப்பல் கப்டன் - அஜித்குமார போயாகொட 'புலிகளின் குரல்' வானொலிக்குத் தெரிவித்தார்.

"நாங்கள் எமது குடும்பத்தினரைப் பார்ப்பதற்கு ஆவலாக இருக்கின்றோம். யுத்தம் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. அரசியல்ரீதியில் பேச்சு மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் - என்றும் அவர் மேலும் கூறினார். (உ-5-164)

## தமிழகக் கடற்படையினரால் 29 இலங்கை மீனவர் கைது!

சென்னை,பெப்.17

தமிழகக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை மீனவர்கள் 29 பேரை நேற்று முன்தினம் தாம் கைது செய்துள்ளதாக தமிழகக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

லட்சதீவுக்கு அருகேயுள்ள கடற்பரப்பில் 5 படகுகளில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயமே இலங்கை மீனவர்களைத் தாம் கைது செய்ததோடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் கண்டுபிடிப்பு

அச்சுவேலி - பருத்தித்துறை வீதியில் பிரதேச சபை நூல் நிலையத்துக்கு அருகில் வீதியோரம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் கிளைமோர் குண்டு ஒன்று நேற்று படையினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவந்தது. இதனையடுத்து பிற்பகல் 2.15 மணிமுதல் அப்பாதை போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டது.

## சூடாநாட்டு வெங்காயம் திருமலையில் கொள்வனவு

### விலை, கட்டணம் நிர்ணயம்

யாழ்ப்பாணம்,பெப்.17

சூடா நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை திருகோணமலையில் வைத்துக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் முன்வந்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ வெங்காயத்தை 32ரூபா 80சதத்துக்கு திருகோணமலையில் உள்ள கூட்டுறவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## சடையர் நாகலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சடையர் நாகலிங்கம் நேற்று (16.02.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் பார்வதியின் அன்புக் கணவரும் சரஸ்வதி (ஜேர்மனி), இராசன், கௌசலா, ஞானதுரை (கொழும்பு), நந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானம் (ஜேர்மனி), ரஞ்சிதமலர், ராசிக், அன்ரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் நிசாந்தன், பிரியங்கா, சுருதிகா, ஜெயந்தினி, கிருஷ்ணரூபன், பரிந்தினி, பருமிலா, அனுஸ்டபாலம், அனுஸ்ரா, அசன், பாலினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2000) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஏ.எம்.ராசிக்**
(மான் மார்க் அப்பள தொழிலகம்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(73763)

## திருமதி அன்ரன் மகேஸ்வரி (தங்கம்மா)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நல்லூரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரன் மகேஸ்வரி 15.02.2000 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அன்ரனின் அன்பு மனைவியும் இரத்தினம் - சிவக்கொழுந்தின் அன்பு மகளும் சபாரத்தினம், சிவபாக்கியம், நவரத்தினம் (துரை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-02-2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ.சிவக்கொழுந்து**
(தாய்)

இல.555, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(73764)

## திருமதி தங்கமணி விக்கினேஸ்வரன்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமணி விக்கினேஸ்வரன் 16.02.2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பொ. விக்கினேஸ்வரன் (ஓய்வுபெற்ற படவரைஞர், D.O.A., வீதி அபிவிருத்தி அதிகார சபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - சிவபாக்கியம் அவர்களின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் பொன்னம்பலம் - இராசம்மா தம்பதிகளின் மருமகளும் கல்பனா (கனடா), வத்சலா (கனடா), மேகலா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமானந்தம் (முன்னாள் உத்தியோகத்தர், இலங்கை வங்கி, சாவகச்சேரி - தற்சமயம் கனடா), தேவகுமார் (கனடா), ஆனந்தநடேசன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் வைரவநாதன் (கொழும்பு), சின்னமணி (கனடா) ஆகியோரின் சகோதரியும் மங்கையர்க்கரசி (கொழும்பு), மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2000) பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைகள் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொ.விக்கினேஸ்வரன்**
(கணவர்)

'திருவேரகம்'
மானிப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு.

(73767)

# கண்ணீர் அஞ்சலி

**எமது கல்வி நிறுவன தமிழ் ஆசிரியரும் நலன் விரும்பியுமான ஞானதிருக்கேதீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்**

## அமரர் இளையதம்பி ஞானசேகரம்

**அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

அதிபர்,
ஆசிரியர்கள்,எழுதுவினைஞர்கள்,
மாணவர்கள்,

*நியூட்டன் அக்கடமி,*
*கோண்டாவில்.*

(73761)

# ஆறாத்துயரமும் நீங்கா நினைவும்

## தம்பியையா சண்முகநாதன்

**(இலங்கை மின்சார சபை மின்மானி வாசிப்பாளர்)**

**அன்னார் கொழும்பில் அகால மரணமடைந்த செய்தி கேட்டு துயருறுகின்றோம். இவரின் இழப்பினை எவராலும் ஈடுசெய்ய முடியாது. அன்னாரை பிரிந்து துயருறும் குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.**

**பரமநாதன் குடும்பத்தினர்**
(மைத்துனர்)

சுண்டுக்குளி.

(73748)

# கண்ணீர் அஞ்சலி

**உயிரைக் காக்க உருவெடுத்து உலகை விட்டகன்ற யாழ். மருத்துவபீட முதலாம் வருட மாணவன்**

## செல்வன் இரவீந்திரன் சுரேஷ்குமார்

**அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் அன்னாரின் பிரிவால் துயருறும் அனைவருக்காகவும் எம் இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.**

**மன்னார் மாணவர் ஒன்றியம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(73743)

# விளையாட்டுப் போட்டிகள்

இணுவில் இந்துக்கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் க.கனகராசா தலைமையில் இன்று பிற்பகல் 1.45 மணிக்கு நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பிரதமவிருந்தினராகவும், உடுவில் பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வி.பாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பழையமாணவர் இ.பாலச்சந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

* * *

உடுவில் மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் செல்வி. சி.செல்லையா தலைமையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு.ஜி.இராசநாயகமும் திருமதி. இராசநாயகமும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வர். (உ-152)

# பாடநூல் விநியோகம்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் நாளை வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்படுமென வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் கல்விப் பணியகத்தில் சமுகம் கொடுத்து தமக்குரிய பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-15-118)


**தேவை**

**உலோக உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றிற்கு அனுபவமுள்ள கணக்காளர் தேவை**

120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(73770)

**மாதாந்தப் பரீட்சை**

**2 முதல் 8 வரை**
(Poya Day)
**சனிக்கிழமை நடைபெறும்.**

**BOND**
**யாழ்நகர்**
(73756)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
இன்றுமட்டும்
**கார்த்திக், பானுப்பிரியா, ஜனகராஜ், நாசர்**
மற்றும் பலர் நடித்த
**கோபுரவாசலிலே**
காட்சிகள் 10.30, 2.30
நாளை முதல்
**ஆவாரம் பூ**
(C/10989)

**லிபேட்டி**
**அச்சுவேலி,**
**பிரசாந், ரியாசென்**
நடித்த
**குட்லக்**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P – 070 – 212223
070 – 212678
(73658)

**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
**விஜய், மந்த்ரா, ரகுவரன்**
நடித்த
***லவ் டுடே***
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.00
(புதிய நேரம்)
(C/11000)


# கண்ணீர் அஞ்சலி

மருத்துவபீட முதலாம் வருட மாணவன்

## செல்வன் இரவீந்திரன் சுரேஷ்குமார்

அவர்களின் திடீர் மறைவினால் துயர் உற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது வேதனை மிகுந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(73768)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கந்தையா

அல்லாரை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா (ஓய்வூதியர், மாவட்ட விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி) 15.02.2000 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் சின்னத்தங்கம் ராசு, ரத்தினம், மணியும் ஆகியோரின் சகோதரரும் திருமதி செல்வராணி சிவராஜா (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி), வெற்றிவேலு (கனடா), பரிமளா (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திலகா (கனடா), சிவநாதன் (கனடா), நாதன் (சுவிற்சர்லாந்து), தம்பிநாதன் (பிறவுண் கம்பனி, கொழும்பு), ஆறுமுகநாதன் (கனடா), சுதாகினி (யாழ் பல்கலைக்கழக இறுதி வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜா (பிரதம லிகிதர், ஓய்வூதியக் கிளை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), இரத்தினசிங்கம் (கால்நடை வைத்தியநிலையம், வேலணை), சின்னப்பு (கனடா), தேவி (கனடா), சிவலீனா (கனடா), கவிதா (சுவிற்சர்லாந்து), கல்யாணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுஜித்தா, கபிலன், நிருஜா, ராகுலன், விபுலன், சாகீசன், நிருசா, தனுசா, நிலானி, நிருபா, ஜனனி, கஜனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.02.2000) வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.சிவராஜா**
(மருமகன்)

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

(73733)

## அப்பு சின்னத்துரை பாக்கியம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பு சின்னத்துரை பாக்கியம் நேற்று (16.02.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பு சின்னத்துரையின் அன்பு மனைவியும் ஈஸ்வரி, மகேஸ்வரி (லண்டன்), கமலாதேவி, பாலசுப்ரமணியம் (அப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சேனாதிராசா, காலஞ்சென்ற சின்னத்தம்பி, செல்வரத்தினம், வில்வராசா, சோதிமலர் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சாண்டோ செல்லர் (கொக்குவில் மேற்கு), வினாசித்தம்பி (இருபாலை) ஆகியோரின் மைத்துனியும் மனோகரன், சோதி, சாந்தன், மூர்த்தி, கணேஷ் (கனடா), சித்ரா, காந்திமதி, பத்மராணி, குமார் (பிரான்ஸ்), இந்திரன் (பிரான்ஸ்), மகேந்திரன் (லண்டன்), மயூரன் (கொழும்பு), கீதா (சுவிஸ்), கீரன் (கொழும்பு), சசி, நிர்மலன், ஜெகதீஸ் (பிரான்ஸ்), கிருஷ்ணன் (இந்தியா), சூரியகலா, மீரா, வசந்தமதி, விஜி, நித்தியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.சதானந்தன்**(ஆனந்தன்)
(பேரன் - சரஸ்வதி மில், கொக்குவில்)

T.P: 070-212220
021-3105
உப்புமட ஒழுங்கை,
கோண்டாவில்.

(C/11052)

## குமரையா கந்தசாமி

(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர், கௌதாரிமுனை)

குமரையா கந்தசாமி நேற்று (16.02.2000) புதன்கிழமை காலை 5.40 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரையா - சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற குமாரசாமி - தில்லைநாயகி தம்பதிகளின் மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாலாம்பிகை, சிவபாலசிங்கம் மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் சகோதரனும் கந்தசாமி, சரோஜினிதேவி, லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஜெகநாதன் (ஜேர்மனி), தர்மினி, தர்சினி, கமலினி (கனடா), காமினி (கனடா), தயாழினி, கேதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமறைச்செல்வி, ஜெயமோகன், சாந்தலிங்கம் (வர்த்தகர், கொய்யாத்தோட்டம், தலைவர் வர்த்தகர் சங்கம், கொழும்புத்துறை), புவனேந்திரன் (கனடா), உதயகுமார் (கனடா), குகனேஸ் ஆகியோரின் மாமனாரும் கீத்தா, சீத்தா (ஜேர்மனி), கோகிலன், அகல்பியா, அஜீத்குமார், ரவிசங்கர், தினேசன், மிதுலா, கார்த்தீபன் (கனடா), குகனீதன், சிந்துஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

54/14 B, சுவாமியார் றோட்,
கொழும்புத்துறை.

(73757)

## இராமு சின்னத்தம்பி

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் விஸ்வமடுவை வதிவிடமாகவும் கொண்ட இராமு சின்னத்தம்பி நேற்று முன்தினம் (15.02.2000) செவ்வாய்க்கிழமை காலை 4.00 மணிக்கு இயற்கை எய்தினார்.

அன்னார் கனகம்மாவின் (கனடா) அன்புக் கணவரும் சி.பாலேந்திரநாதன் (யாழ். ப.நோ.கூ.சங்க 14ஆம் கிளை முகாமையாளர்), சி.பாலராணி (விஸ்வமடு), சி.புவனேஸ்வரி (கனடா), சி.குணபாலசிங்கம் (கனடா), சி.இராசமணி (கனடா), சி.சூரியகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பா.சிவநாயகி (யாழ்), ஆ.மகேந்திரம் (விஸ்வமடு), இ.மகாதேவன் (கனடா), அ.ஜெகதீசன் (கனடா), செ.ரஞ்சினி (விஸ்வமடு), சுலோசனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் நேற்று (16.02.2000) புதன்கிழமை பி.ப 4 மணிக்கு விஸ்வமடுவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.பாலேந்திரநாதன்**
(யாழ். ப.நோ.கூ.சங்கக் கிளை 14 முகாமையாளர்)

செட்டியாவளவு,
சுன்னாகம்.

(73755)

# உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சி வகுப்புக்கள்

தென்மராட்சி, பெப். 17

வடக்கு — கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவியுடன் உள்ளூராட்சிமன்றங்களின் தலைவர்கள், செயலாளர்கள் உட்பட சகலதர உத்தியோகத்தர்களுக்குமான முகாமைத்துவப் பயிற்சி வகுப்புகளை விரைவில் நடத்தவுள்ளது.

பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளவுள்ள உத்தியோகத்தர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு திணைக்கள செயலாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தலைவர், செயலாளர், எழுதுநர் வருமான மேற்பார்வையாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், கணக்காளர், நிதி உதவியாளர், சனசமூக அபிவிருத்தி அலுவலர், நூலகர், நூலக உதவியாளர், பாலர் பாடசாலை ஆசிரியைகள் ஆகியோருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி நிர்வாகம், உற்பத்தித் திறன் மேம்பாடும் செயலாற்றுகையும், பொது சன பங்குபற்றலும் கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டமும், அலுவலக முறைமையும் செயலாற்றுகை மேம்பாடும், உள்ளூராட்சி அபிவிருத்தித் திட்டம், சூழல் முகாமைத்துவம், நூலக சேவைகள், பாலர் பாடசாலை, உள்ளூராட்சி நிறுவன கணக்கு முறைமைகள், உள்ளூராட்சி நிறுவன பாதீடு, உள்ளூராட்சி நிறுவன வருமான முகாமை, உள்ளூராட்சி நிறுவன பௌதிக திட்டமிடல், உள்ளூராட்சி நிறுவன பாரம்பரிய சேவைகள் ஆகிய 12 பிரிவுகள் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

(இ-117)

## விவசாயிகளிடம் சோளம் கொள்வனவு

தென்மராட்சி, பெப். 17

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோளம் பயிர்ச் செய்கை வெற்றியளித்துள்ளதையடுத்து விவசாயிகளிடமிருந்து சோளம் விதைகளை கிலோ 25 ரூபா வீதம் கொள்வனவு செய்யச் சமநல சேவைகள் நிலையத்தினர் முன்வந்துள்ளனர்.

விவசாயிகள் விற்பனைக்கு வைத்துள்ள சோளம் விதைகளின் விவரங்களை சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களில் உள்ள சமநல கேந்திர நிலையங்களுக்கு அறிவித்தால் அவற்றினை உரிய விலைக்கு பெற்றுக் கொள்ள முடியுமென சாவகச்சேரி பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## தமிழர் முழவியல் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். பல்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர் சி. மகேந்திரன் எழுதிய "தமிழர் முழவியல்" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆந் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மதியம் 12-30 மணிக்கு நடைபெறும்.

இந்த நூல் வெளியீட்டு விழா துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் பேராயர் அதி வண. எஸ். ஜெபநேசன், அருட்கவி சி. விநாசித்தம்பி ஆகியோரின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும்.

பிரம்மஸ்ரீ ஏ.என். சோமஸ்கந்தசர்மாவின் வெளியீட்டுரையுடனும் பேராசிரியர் அ. சண்முகதாஸின் ஆய்வுரையுடனும் நடைபெறவிருக்கும் இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஏகநாதன் நயப்புரை வழங்குவார். (இ)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, பெப். 17

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்கா அம்பாள் ஆலய லட்சார்ச்சனை உற்சவம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை விசேட சங்காபிஷேகமும், அலங்கார ரதத்தில் அம்பாள் வீதியுலா வருதலும் இடம்பெறும்.

(சு-117)

★ ★ ★

நெடுந்தீவு, பெப். 17

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

மாசிமகம் தினமான அன்றையதினம் பிற்பகல் 5 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

கடந்த 15 வருடங்களின் பின் இம்மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

(சு-111)

★ ★ ★

தென்மராட்சி, பெப். 17

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய மகோற்சவம் கடந்த பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(இ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 17

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமான் ஆலய இலட்சார்ச்சனை கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமானது.

தொடர்ந்து பதினொரு நாள்கள் நடைபெறும் இந்த இலட்சார்ச்சனை நிகழ்வு, விசேட அபிஷேக ஆராதனைகளுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். (இ-15)

## சமய அறிவுப் போட்டி

சண்டிலிப்பாய், பெப். 17

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபை எதிர்வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் முதலிடம் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-135)

## நிலக்கடலை கொள்வனவு

தென்மராட்சி, பெப். 17

பளைப் பிரதேசத்தில் மானாவாரிப் பயிர்ச் செய்கையாக மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலை அறுவடை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் அவற்றை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து வருகின்றனர். தரமான நிலக்கடலை கிலோ 55 ரூபாவாக கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

பிரதேசத்தில் பனங்கிழங்கு பிடுங்கும் வேலைகள் நடைபெறுவதால் பொதுமக்களிடமிருந்து புளுக்கொடியல் கிலோ 28 ரூபா வீதம் கொள்வனவு செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## சிற்பகலாநிதிக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 17

ஈழத்து நாதஸ்வரக் கலைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெறும் சிற்பகலாநிதி அராலியூர் விஸ்வபிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கத்தின் கலைப்பணியைப் போற்றும் பாராட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைப்பிட்டி வீரவேலணி ஸ்ரீ காளிமாதேவி ஆலயத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். வாழ்த்துரைகளை கலாநிதி சி.க. சிற்றம்பலம், சிற்பசக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினம், கலாசூரி என். கே. பத்மநாதன், கவிஞர் சோ. பத்மநாதன், நா. சந்திரமோகன் ஆகியோர் வழங்குவார்கள்.

விழாவில் சிற்பகலாநிதி சி. அமரசிங்கம் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படுவார்.

(இ-8)

## அடகுபிடிக்கும் வீட்டில் திருட்டு; சுதுமலையில் 10பேர் கைதாகினர்

வலி. தென்மேற்கு, பெப். 17

சுதுமலைப் பகுதியில் அடகு பிடிக்கும் வீட்டில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பத்துப்பேர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்திருட்டில் 34 பேர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் மூலம் மேலும் 14 பேர் பொலிஸாரினால் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீட்டில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ-5-135)

## நீதிமன்றத்தை அவமதித்தவருக்கு 5 மாதக் கடூழியச் சிறை

தென்மராட்சி, பெப். 17

நீதிமன்ற அழைப்பாணையை ஏற்க மறுத்து அவமதித்துப் பேசிய இயற்றாலை வாசி ஒருவருக்கு ஐந்து மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக நீதிமன்றப் பிஸ்கால் கொண்டு சென்ற அழைப்பாணையை ஏற்க மறுத்த இந்த நபர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசினாராம்.

இந்த விடயம் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அப் பகுதிக் கிராம அலுவலர் மூலம் அவருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டது.

நீதிமன்றுக்கு வந்த இந்த நபருக்கு நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக நீதிவான் ஐந்துமாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

(இ-117)

## சங்கக் கட்டடம் புனரமைப்பு

சண்டிலிப்பாய், பெப். 17

உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் வழங்கிய 50 ஆயிரம் ரூபா நிதியைக்கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன் திறப்புவிழா விரைவில் நடைபெற விருப்பதாக சங்கத் தலைவரும், ஆனைக்கோட்டை பிரஜைகள் குழுத் தலைவருமான ந. சிவபாதம் தெரிவித்தார்.

(இ-135)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். பல்கலைக்கழகத்தின் 1997 ஆம் ஆண்டுக்கான நுண்கலை முதற்தேர்வு நுண்கலைமாணி பகுதி I, II, III, IV ஆகியவற்றுக்கான பரீட்சைகள் விரைவில் நடைபெற உள்ளன.

இதற்குரிய விண்ணப்பங்கள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுவதால் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## வாசகர் திருமுகம்

### முடிவினை மீள் பரிசீலனை செய்யவேண்டும்

வீரசிங்கம் மண்டபம் சம்பந்தமாகக் கூட்டுறவுச் சபையினர் எடுத்த முடிவு எமது மக்களைத் தற்போதைய நாட்டு நிலைமையில் பாதிக்கும் என்பது உண்மைதான். இருந்தாலும் ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அது எமக்குப் பயன்படும், பலன் தரும் என்பதே உண்மை. பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகம் ஆனதனால் ஒரு பிரபல்யமான கல்லூரி எமது பிரதேசத்தில் இல்லாது போய்விட்டது. அதேபோல வீரசிங்கம் மண்டபத்தில் மேல் நீதிமன்றம் இயங்குமாகையால் அது எமது கலை, கலாசாரம், பண்பாடு இடம்பெறும் ஒரு மண்டபம் பிரபல்யமான ஓர் இடத்தில் இல்லாது போய்விடும். அத்துடன் இனி ஒரு நீதிமன்றக் கட்டடம் புதிதாக அமைத்து நீதிமன்றம் தொடங்குவதானால் அது இன்றைய நிலையில் சாத்தியப்படக்கூடிய காரியம் அல்ல. அது எமது மக்களுக்கு உடனடிப் பலன் தரப்போவதும் அல்ல. ஆகவே இவை யாவற்றையும் கருத்தில் கொண்டும் தற்போது எமது நாட்டு நிலைமையைக் கருத்தில் கொண்டும் கூட்டுறவுச் சபையினர் தமது முடிவினை மீள் பரிசீலனை செய்து தற்காலிகமாக ஓர் ஒப்பந்த அடிப்படையில் மேல் நீதிமன்றம் இங்கு தனது கடமையை எமது மக்களுக்கு எமது பிரதேசத்தில் இயங்க இடம் கொடுக்கலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

எஸ். வாஜி,

கொக்குவில்.

### தொலைபேசி விபரி வழங்குக

தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டவர்களுக்கு ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுவதும், தொலைபேசி உடையோரது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியதுமான தொலைபேசி விபரிகளை விநியோகிப்பதும் உலகளாவிய நடைமுறை ஆகும். இந்த நடைமுறை இலங்கையில் யாழ்ப்பாணம் தவிர்ந்த மற்றைய இடங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படாதது கவலைக்குரியது. தொலைபேசி இணைப்பை வழங்கிவிட்டு, இலக்கங்களை நீங்களே அறிந்து, பயன்படுத்துங்கள் என்று கூறுவது, விருந்துக்கு அழைத்துப் பந்தியில் இருத்தி வாழை இலையையும் முன்னால் வைத்துவிட்டு உணவு எதையும் பரிமாறாது, நீங்கள் விரும்பிய உணவைச் சாப்பிடுங்கள் எனக்கூறுவதை ஒத்தது.

தொலைபேசி இணைப்பை வழங்கும் டெலிக்கொம் நிறுவனம், தொலைபேசியுடையோருக்கும், பொதுத் தொலைபேசி பொருத்தப்பட்டுள்ள இடங்களுக்கும் தொலைபேசி விபரிகளை வழங்கவேண்டும்.

ச. அ. கோ மூர்த்தி.

திருநெல்வேலி.

# RGL பயிற்சியகம்

சிகையலங்காரம் நூறு இந்திய நவீனமுறைகள், மணமகள் அலங்காரங்கள்

ஒப்பனைக்கலை (**Facial**)

மருதாணி, மயிர்சுருட்டுதல், மயிருக்கு சாயம்திட்டல், மயிர் பல வடிவில் வெட்டுதல், முகத்திற்கு Bleach, இமைகளை வடிவமைத்தல்.

கேக்ஐசிங் (பொண்டன்)

குறுகிய காலத்தில் கற்றுக்கொடுக்கப்படும்

முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

2 வது பிரிவு 20-2-2000 மாலை — 3-00
3 வது பிரிவு 27-2-2000 காலை — 10-00
4 வது பிரிவு 05-3-2000 மாலை — 3-00

திருமதி கௌரி லோகநாதன்
55, சிவன் புது வீதி, நல்லூர்.

(73729)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 15 — 10 — 1931

உதிர்வு 18 — 01 — 2000

## அமரர் சிவக்கொழுந்து சுந்தரலிங்கம்

(சுதுமலை)

அன்பின் வடிவமாய்
ஆசையின் உருவமாய்
இன்பமுடன் வாழ்ந்த
எங்கப் பெருமகனின்

ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

–குடும்பத்தினர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(73695)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 16 — 02 — 1925

மறைவு: 18 — 01 — 2000

## அமரர் சுப்பு பரமு

முற்பிறப்பின் புண்ணியத்தால் நாம் பெற்ற – எங்கள் வாழ்வின் சுடர்விளக்காய் ஒளியீந்து மறைந்த எங்கள் – ஐயா

அன்பும் பண்பும் பாசமிக்க தந்தையாய்
நன்மக்கள் நான்கு பெற்று நலமாக வாழ்ந்தவரே!
நேர்மையின் நிறைகுடமாய் – ஊரெல்லாம்
உன்பெயர் சொல்ல உயர்வாக வாழ்ந்த எம் ஐயா!
கண்ணீர் சிந்தி நாம் நிற்க
காலன் உனை அழைத்தானோ?
வாழ்வில் நேசித்தவரே மரணத்திலும் மறவாதீர்!

அன்னாரின் மரணச் சடங்கில் நேரடியாகக் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உதவிகள் புரிந்த அனைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(73673)

# போயாதின ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 17

திருநெல்வேலி ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் மாதாந்தம் நடைபெற்றுவரும் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

காயத்திரி மந்திர ஜெபம், இலட்சார்ச்சனை, பண்ணிசை மற்றும் பஜனை என்பனவும் நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ-7)

# கணனிப் பயிற்சி

விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சின் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள கணனிப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி மார்ச் மாதம் முதலாம் திகதியாகும்.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு சபையின் தலைவருக்குப் (Chairman, Naifa) பெறப்பட்ட நூறு ரூபாகாசுக் கட்டளையையும் இணைத்து 'மாகாண முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை, இல. 07, கோயில் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

இவ் விடயம் தொடர்பாக 9. 2. 2000 ஆம் திகதிய உதயனில் 9 ஆம் பக்கத்தில் பிரசுரமான செய்தியில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டதற்கு இணங்க இந்த விவரங்கள் வெளியிடப்படுகின்றன. (அ-க)

# மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மரவேலைப்பயிற்சிப் பாடசாலையில் புதிய ஆண்டுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எட்டாம் ஆண்டு சித்தியடைந்த, 14 வயது முதல் 30 வயது வரைக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும்—

விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் 'பிரதேச செயலாளர் பிரதேசச் செயலகம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குஅனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும்—

அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# தொலைபேசி வசதி இல்லை

வேலணை, பெப்.17

புங்குடுதீவுப் பகுதியில் தொலைத்தொடர்பு வசதி இல்லாமையினால் அப் பகுதி வாழ்மக்கள் வெளியிடங்களில் உள்ளவர்களுடன் அவசர செய்தியினைப் பரிமாறிக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பகுதியினைப் பொறுத்தவரையில் தனியார் தொலைத்தொடர்பு நிலையங்கள் ஒன்று கூட இல்லாமையினால் இங்குள்ள மக்கள் அவசர செய்தியினையோ அன்றி வேறுதகவல்களையோ வெளியிடங்களில் உள்ளவர்களுடன் பரிமாற வேண்டுமாயின் வேலணைக்கோ அல்லது யாழ். நகருக்கோ செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். (ஐ-167)

# யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 17

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை நடத்திவருகிறது.

ஆண், பெண் இருபாலாரும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# கங்காணி நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 8 பேருக்கு கங்காணி நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சேவை மூப்பின் அடிப்படையிலேயே இந்தநியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-10)

# தமிழ்த் தினப் போட்டி தொடர்பான சுற்றறிக்கை

திருநெல்வேலி, பெப். 17

இந்த வருடத்துக்கான தமிழ்த் தினப்போட்டிகளை நடத்துவது தொடர்பான சுற்றறிக்கை கொழும்பிலுள்ள கல்வி அமைச்சினால் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் தமிழ்த் தினப்போட்டிகளை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவு4 தரம் 10, 11க்கான போட்டி நிகழ்ச்சிகளில் தனி நடனம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், இதற்கான நேரம் 7 தொடக்கம் 8 நிமிடங்கள் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ—135)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி





யா/தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடியை வாழ்விடமாகவும் கொண்ட

| திருமதி | செல்வன் |
|---|---|
| **அன்னமலர் கந்தசாமி** | **கஜன் கந்தசாமி** |
| அன்னை மடியில்: 25 -- 07 -- 1947 | அன்னை மடியில்: 02 -- 04 -- 1981 |

ஆண்டவன் அடியில்: **19 -- 02 -- 1997**

ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
நீறாகிப் போன நிலை நினைவிலும் மாறாது
மாறாத அன்பு கொண்டு மகிழ்வுடனே வாழ்ந்தோமே
தேற்று நிற்கின்றேன் தேம்பியே நானிங்கே!

மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டு சென்றாலும் உங்களை என்றும் மறவாத

கணவன், தந்தை.
(கந்தசாமி)
அம்மம்மா, சண்முகராசா,
யோகா, சிவபாலன்.

48, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

(73599)

# பிரிட்டிஷ் படையில் இணையும் ஆசியர் எண்ணிக்கை அதிகரிப்பு

லண்டன், பெப். 17

பிரிட்டிஷ் இராணுவத்தில் இணைந்து கொள்ளும் ஆசிய, ஆபிரிக்க இனத்தவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் விசேட படையணியான 'ஹவுஸ் வோல்ட்' படைப்பிரிவின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் வி. டபிள்யூ. காட்டர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தனது படைப்பிரிவில் மட்டும் இந்த ஆண்டு கடந்த ஆண்டிலும் பார்க்க 46 சதவீதம் கூடுதலான ஆசிய, ஆபிரிக்க இளைஞர்கள் இணைந்துள்ளார்கள் என்று அவர் கூறினார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்தப் படைப்பிரிவில் ஆசிய, ஆபிரிக்க சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த 7 பேர் மட்டுமே பணியாற்றி வந்தனர். தற்போது படையில் இணையும் அவர்களது ஆர்வம் அதிகரித்துள்ளது.

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தில் இணைவதற்கு பிரிட்டிஷ் இளைஞர்கள் முன்வருவது தற்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. கடந்த பல ஆண்டுகளில் பிரிட்டிஷ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் படுதோல்வி அடைந்துள்ளன.

இதனால் ஆசிய மற்றும் ஆபிரிக்க இனங்களைச் சேர்ந்த இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்கும் கடும் முயற்சியில் பிரிட்டிஷ் அரசு ஈடுபட்டுள்ளது. அதை அடுத்தே சிறுபான்மையினர் படையில் இணையும் வீதம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

படை அதிகாரிகள் மட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க இனத்தவர்களைச் சேர்ப்பதற்கும் பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகிறது. (இ-6-5)

# பினோசேயின் உடல்நிலை பற்றிய அறிக்கை வெளியிடப்பட வேண்டும்

## லண்டன் நீதிமன்றம் உத்தரவு

லண்டன், பெப். 17

சிலி நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியான பினோசேயின் உடல் நிலை குறித்த அறிக்கையை பிரிட்டிஷ் அரசு உடனடியாக வெளியிட வேண்டும் என்று லண்டன் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

சிலியில் இடம்பெற்ற ஆயிரக்கணக்கான மக்களின் படுகொலை தொடர்பான விசாரணைகளுக்காக பினோசேயை தம்மிடம் ஒப்படைக்குமாறு சிலி அரசு பிரிட்டனிடம் கோரி இருந்தது. இதை அடுத்து ஒரு வருடத்துக்கு முன்னர் பினோசே பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டார்.

ஆனால் விசாரணைகளை எதிர் நோக்கக் கூடிய உடல் நிலையில் பினோசே இல்லை என்று தெரிவித்து அவரை விடுதலை செய்யப் போவதாகப் பிரிட்டிஷ் அரசு அண்மையில் அறிவித்திருந்தது. இதனை அடுத்தே அவரது உடல் நிலை பற்றிய முழுமையான வைத்திய அறிக்கை ஒன்றை உடனடியாக வெளியிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-6-5)

# செச்சினிய, கொசோவோ நெருக்கடிகள் வெவ்வேறானவை

## கிளின்ரன் கூறுகிறார்

வாஷிங்ரன், பெப். 17

கொசோவோப் பிரச்சினையும் செச்சினியப் பிரச்சினையும் ஒரே மாதிரியான பிரச்சினைகள் அல்ல அவற்றை ஒரே வழியில் கையாள முடியாது இப்படி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொசோவோ இன நெருக்கடியில் தலையிட்டு அதற்கு ஒரு தீர்வுகாண முயற்சி செய்த நேட்டோ அமைப்பு செச்னியப் பிரச்சினையில் மட்டும் ஏன் தலையிடவில்லை என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செச்சினியாவில் பொது மக்கள் ரஷ்யப் படையினரால் கொல்லப்படுவதை தீவிரவாதிகள் விரும்புகின்றார்கள் இது ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் எதிர் பார்க்கின்றார்கள் என்றும்— கிளின்ரன் மேலும் தெரிவித்தார். (இ-6-5)

# தெற்கு லெபனானில் இஸ்ரேல் மீண்டும் விமானத் தாக்குதல்!

ஜெருசலேம், பெப். 17

தெற்கு லெபனானின் நகரங்கள் மீது இஸ்ரேல் மீண்டும் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடத்தி உள்ளது.

மலைப்பகுதி நகரங்களில் உள்ள ஹிஸ்புல்லாவின் நிலைகளை இலக்கு வைத்து இஸ்ரேலிய விமானங்கள் பல தடவைகள் குண்டுத்தாக்குதல்களை நடத்தின என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேல் — லெபனான் பாதுகாப்பு வலய வடபகுதியில் அமைந்துள்ள ஹிஸ்புல்லாவின் நிலைகள் மீதே தாக்குதல்கள் நடத்தியதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அதே சமயம் —

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்கள் மேலும் தீவிரமாகும் என்று ஹிஸ்புல்லா அறிவித்துள்ளது. லெபனானில் பொதுமக்கள் நிலைகள் மீது இஸ்ரேல் குண்டுத்தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரிக்குமே தவிர குறையாது என்று ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஷேக் ஹலென் ரஸ்ரல்லாஹ் கூறினார். (இ-6-5)

# பெய்ஜிங்கில் குண்டு வெடிப்பு

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் அமைந்துள்ள தியனன்மென் சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்.

மனநோயாளி ஒருவர் தனக்குத் தானே குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

## ஜேர்மன் எதிர்க் கட்சிக்கு

# சட்டவிரோத நிதி உதவி பெற்றமைக்காக அபராதம்

## நாடாளுமன்றத் தலைவர் அறிவிப்பு

பேர்லின் பெப். 17

ஜேர்மனியின் எதிர்க்கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி சட்டவிரோதமான முறையில் நிதி உதவிகளைப் பெற்றதற்காக 2 கோடி டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பேர்லினில் நாடாளுமன்றத் தல்லவர் நேற்று இதனை அறிவித்தார். எந்த ஒரு கட்சியும் சட்ட திட்டங்களுக்கு விதி விலக்கானது அல்ல என்று அவர் கூறினார்.

ஜேர்மனின் முன்னாள் அதிபர் ஹெல்மட்கோல் தலைமையில் கட்சி இருந்த போது கட்சியின் தேவைகளுக்காக சட்டவிரோதமான முறையில் நிதி உதவி பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றத்துக்காக ஹெல்மட் கோல் மீது ஏற்கனவே கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தமது கட்சிக்கு 10 லட்சம் டொலர் நிதி உதவி ரகசியமான முறையில் வழங்கப்பட்டது என்பதை ஒத்துக்கொண்ட கோல் அந்த நிதி உதவி யாரிடம் இருந்து கிடைத்தது என்று தெரிவிக்க மறுத்துவிட்டார்.

கட்சிபெற்ற இந்த சட்டவிரோத நிதி உதவிக்காகவே தற்போது அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-6-5)

# வட அயர்லாந்து

## சமாதான நடவடிக்கைகளுக்கு புத்துயிரளிக்கும் முயற்சி தோல்வி

லண்டன், பெப். 17

வட அயர்லாந்து சமாதான ஒப்பந்தம் தோல்வி அடைந்ததை அடுத்து சமாதான முயற்சிகளுக்குப் புத்துயிர் அளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீண்டும்தோல்வி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஐரிஷ் குடியரசு இராணுவத்துடன் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வி அடைந்தன என்றும் சமாதானப் பேச்சுக்களில் இருந்து ஐரிஷ் குடியரசு இராணுவம் பின்வாங்கி விட்டது என்றும்—தெரிவிக்கப்பட்டது.

வட அயர்லாந்தில் தன்னாட்சி அதிகாரம் கொண்ட சட்டசபை ஒன்று அமைக்கப்பட்ட பின்னரும் ஐ.ஆர்.ஏ. இயக்கம் தமது ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்ததை அடுத்து சமாதான ஒப்பந்தம் இடை நிறுத்தப்பட்டது.

இதனை அடுத்து பிரிட்டன் வட அயர்லாந்தை மீண்டும் தனது நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தது. தற்போது சமாதான ஒப்பந்தம் நிரந்தரமாகத் தோல்வி அடைந்து விடாமல் இருப்பதற்கான முயற்சிகளில் சமாதானப் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை —

இப்பிரச்சினை குறித்து ஆராய பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் பிரதமர்கள் நேற்றுப் பேச்சு நடத்த இருந்தனர்.

# பங்களாதேஷில்

## எதிர்க் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் 30 பேர் காயம்

பங்களாதேஷில்அண்மையில் நிறைவேற்றப்பட்ட பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்துக்கு ஜனாதிபதி அங்கீகாரம் அளித்ததை எதிர்த்து நேற்றும் நேற்று முன்தினமும் நாடளாவிய ரீதியில் எதிர்க் கட்சிகள் ஹர்த்தால் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன.

ஆர்ப்பாட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறைகளில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 10க்கும் மேற்பட்டோர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துறைமுக நகரமான சிட்டக்கொங்கில் இடம்பெற்ற பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றைப் பொலீஸார் கலைக்க முற்பட்டனர் என்றும் — இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் பெரும் மோதல் ஏற்பட்டது என்றும்-

இந்த மோதலிலேயே அதிகளவானோர் காயமடைந்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரான முஷெப்கானும் இந்த வன்முறைகளில் சிக்கிச் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

எனினும் நேற்றுக் காலை முதல் ஹர்த்தால் போராட்டம் பெருமளவில் வெற்றியளிக்கவில்லை என்று கூறப்படுகிறது. தலைநகர் டாக்கா உட்பட முக்கிய நகர்களில் பகல் நேரம் ஓரளவு இயல்பு நிலை திரும்பி இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-6-5)

## உலக அரங்கில்

# உலக அரங்கில் இந்திய கௌரவம் தாழ்ந்து விட்டது

புதுடில்லி, பெப். 17

இந்தியாவில் ஆட்சியில் உள்ள வாஜ்பாய் தலைமையிலான அரசின் தவறான கொள்கைகளால் உலக அரங்கில் இந்தியாவின் கௌரவம் தாழ்ந்து விட்டது.

எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார். தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இதனைக் கூறினார். (இ - 6 - 5)

## ஐரோப்பிய யூனியனால் விதிக்கப்பட்ட

# யுகோஸ்லாவியாவுக்கு எதிரான தடைகளைத் தளர்த்த முடிவு

லண்டன், பெப். 17

யூகோஸ்லாவியாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள சர்வதேசத்தடைகளைத் தளர்த்துவதற்கு ஐரோப்பிய யூனியன் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளின் மாநாட்டில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து சர்வதேச விமான சேவைகளுக்கான தடை உட்பட அனைத்து விமான சேவைகளுக்குமான தடைகளும் நீக்கப்படும்.

எனினும் வெளிநாட்டு வங்கிகள் மூலம் பெருமளவு பணத்தை யுகோஸ்லாவிய அரசு கையாளுவதை தடுக்க நிதிச் சேவை நடவடிக்கைகளைக் கடுமையாக்க ஐரோப்பிய யூனியன் தீர்மானித்துள்ளது என்று அதன் ராஜியத்துறைப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொசோவோவில் யூகோஸ்லாவியா கடைப்பிடித்த கடுமையான நடைமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஆண்டு ஆரம்பத்தில் ஐரோப்பிய யூனியன் தடைகளை விதித்திருந்தது. தற்போது கொசோவோப் பிரச்சினை ஒரு தீர்வுக்கு வந்திருப்பதை அடுத்து தடைகளைத் தளர்த்த யூனியன் முன்வந்துள்ளது. (இ-6-9)

# தாயைக் கொன்ற மகன்

பெய்ஜிங், பெப். 16

கால்பந்து விளையாடுவதற்கும் தொலைக்காட்சி பார்ப்பதற்கும் தடை விதித்த தாயை அவரது 18 வயது மகன் அடித்துக் கொன்ற சம்பவம் ஒன்று நேற்றுச் சீனாவில் இடம்பெற்றது.

வகுப்பில் எப்பொழுதும் முதல் 10 மாணவர்களில் ஒருவராகத் தான் வர வேண்டும் என்று தாய் கூறி வந்ததாகவும் —

இதற்காக எப்போதும் தன்னைப் படிக்குமாறு தாய் வற்புறுத்தி வந்ததாகவும்— அந்த இளைஞர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார். (இ-6-9)

# அரசின் வரவு செலவுத் திட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுவது தமிழர்களே!

## ஜோசப் எம். பி. கூறுகிறார்

கொழும்பு, பெப். 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வரவுசெலவுத் திட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படப்போவது தமிழர்களே.

மட்டக்களப்பு மாவட்ட எம். பியும் தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்றக் குழுத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் போருக்கு பெருமளவு நிதி ஒதுக்கீட்டைச் செய்யும் வரவு செலவுத் திட்டமாகவே அமைந்திருக்கிறது. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காகவே பாதுகாப்பு செலவினங்களுக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பெரும்பகுதி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனவே இந்த வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்து வாக்களிக்கும்.

பாதுகாபபு செலவீனங்களுக்கென இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 4,147 கோடி ரூபா ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 4,811கோடி ரூபா பாதுகாப்பு செலவீனமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடம் பெரும்பாலும் 6,000 கோடி ரூபாவுக்கு மேல் குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் பாதுகாப்பு செலவீனங்கள் அதிகரிக்கப்படலாம். கடந்த காலங்களில் ஒவ்வொரு வருடமும் பாதுகாப்பு செலவீனங்களுக்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட பின்னர் குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தில் 4,127 கோடி ரூபா பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டது. பின்னர் 5,600கோடி ரூபாவாக குறைநிரப்பு பிரேரணை மூலம் அதிகரிக்கப்பட்டது.

அதேபோல்தான் இம்முறையும் பாதுகாப்புக்கான நிதி அதிகரிக்கக்கூடிய சூழ் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை முப்படையினருக்கும் பொலீஸாருக்கும் சிறைக்காவலர்களுக்கும் பாதணிகள், சீருடைகள், இடுப்பு நாடாக்கள் என்பன தயாரிக்க தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கும் பொலீஸ் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. இந்த பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பொலீஸாருக்கு இராணுவப்பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. இவை அனைத்தும் போரைத் தொடர்ந்து நடத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடவுச்சீட்டுப் பெறுவதற்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கடவுச்சீட்டைத் தொலைத்த ஒருவர் மீண்டும் கடவுச்சீட்டை பெறுவதாக இருந்தால் 10 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும். கடவுச்சீட்டு கட்டண அதிகரிப்பால் பெரும்பாலும் தமிழர்களே பாதிக்கப்படவுள்ளனர்.

யுத்தசூழல் காரணமாக வடக்கு—கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கிறார்கள். அதேவேளை இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயரும் வடக்கு — கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது உடைமைகளை இழக்கும் போது கடவுச் சீட்டையும் இழக்கநேரிடுகிறது.

சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினரால் கொழும்பு போன்ற இடங்களில் தமிழர்கள் கைது செய்யப்படுகின்ற போது அவர்களின் கடவுச்சீட்டையும் பறிமுதல் செய்கின்றனர். அவை பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுவதில்லை கடவுச்சீட்டை பறிகொடுத்தவர்கள் தமது கடவுச் சீட்டு தொலைந்து விட்டது என காரணம் காட்டியே புதிய கடவுச் சீட்டை பெற வேண்டியிருக்கிறது. எனவே கடவுச் சீட்டைப் பெறுவதற்கான கட்டண அதிகரிப்பும்தமிழ்மக்களையே பெரிதும் பாதித்திருக்கிறது.

இந்த வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கோ, சாதாரண பொதுமக்களுக்கோ நன்மை தரக் கூடிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்பட வில்லை.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்தே வாக்களிக்கும்— என்றார்.

(இ-21)

# பாவனைக்காலம் முடிவடைந்த பற்றறி கடைகளில் விற்பனை

புன்னாலைக்கட்டுவன், பெப். 17

சில தனியார் கடைகளில் விற்கப்படும்ரோர்ச்பற்றறிகள் காலம் கடந்தவையாக இருப்பதனால் அவற்றின் மின் வழங்கும் திறன் மிகவும் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலங்களில் குடாநாட்டில் ரோர்ச் பற்றறிகளுக்குத் தட்டுப்பாடு நிலவியதால் சில வியாபாரிகள் பற்றறிகளைப் பதுக்கி வைத்திருந்தனர் என்றும் —

அவை பாவனைக்கு உதவாமற் போவதற்கு இதுவே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-133)

# வீதித் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தம்

புன்னாலைக்கட்டுவன் பெப். 17

மட்டுவில் அம்மன் கோயிலுக்கும் கனகம்புளியடிச் சந்திக்கும் இடைப்பட்ட வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் இருந்தது.

எனினும் அண்மையில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் அத்திருத்த வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் போக்குவரத்துப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இப்பாதையினூடாக பேருந்து சேவைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-133)

# கட்டுரைப் போட்டிகள்

வலிகாமம்தெற்கு, பெப். 17

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-152)

# பூர்த்தியடையும் நிலையில்

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஜேர்மன் தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் மலசல கூட வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

கடந்தகால வன்செயல்களினால் இந்தப் பாடசாலையில் இருந்த மலசலகூடக் கட்டடம் சேதமடைந்ததைத் தொடர்ந்தே புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. (இ-133)

# நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், பெப். 17

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று கொழும்பு செல்வதற்காகப் பதிவுகளை மேற்கொண்ட நோயாளர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் பயண ஒழுக்குகளுடன் காலை ஏழு மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது

இதேவேளை —

எதிர்வரும் 22 ஆம், 25 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ள கப்பல் சேவையில் கொழும்பு செல்ல பதிவுகளை மேற்கொண்டநோயாளர்களையும் குறித்த திகதிகளில் பயண ஒழுங்குகளுடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு சமுகம் தரும்படி கோரப்பட்டுள்ளது (இ-9)

# சட்டமாணி பதிவு

திறந்த பல்கலைக்கழகத்தில் 2000 ஆம் ஆண்டின் சட்டமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களை நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் யாழ். பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

பதிவின்போது 3.5 X 4.5 செ. மீற்றர் அளவுள்ள இரண்டு புகைப் படங்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(உ-69)

# பண்பாட்டின் அனைத்துகூறுகளையும் எடுத்தியம்பும் நூலாகத் திருக்குறள்

## நூல் மகிமை வெளியீட்டுவிழாவில் உரை

சுன்னாகம், பெப். 17

தமிழருடைய பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் எடுத்தியம்பும் நூலாகத் திருக்குறள் விளங்குகிறது. அத்தகைய நூலுக்கு உரை விளக்கம் செய்தமை நமது பண்பாட்டின் வேர்களைக் கண்டறியும் முயற்சி ஆகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

ஏழாலை கலாநிதி பண்டிதர் மு. கந்தையா எழுதிய திருக்குறள் ஒழிபியல்பரிமேலழகர் உரை விளக்கம் என்ற நூலின் நூல் மகிமை வெளியீட்டு விழாவில் விளக்கவுரை ஆய்வு நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் கடந்த சனியன்று அ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தொடக்க உரையை உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும், வரவேற்புரையை பண்டிதர் இரா. சுப்பிரமணியமும் நிகழ்த்தினர். பண்டிதர் வ. பேரின்பநாயகம் மங்களாசரணை வழங்கினார்.

அங்கு உரையாற்றுகையில் சுப்பிரமணியன் மேலும் கூறியதாவது:

தமிழ் நாட்டின் பட்டிதொட்டி எங்கும் திருக்குறள் ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்குள்ள நாளிதழ்களை எடுத்துப் பார்த்தால் தினசரி திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடந்த வண்ணமே இருப்பது தெரியவரும்.

சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆய்வுக்கு தனித் தவிசுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகமட்டத்தில் திருக்குறளுக்கான உரை நூல்கள் நிரற்படுத்தப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் ஒப்பீட்டு ஆய்வுகள் நடக்கின்றன. இந்த ஒப்பீட்டு ஆய்வுகள் என்ற வகையில் சில கலாநிதிப்பட்ட ஆய்வுகளும் நடந்துள்ளன.

சமூகவியல், அரசியல், பொருளியல், சட்டவியல், மொழியியல் எனப் பல்வேறு அடிப்படைகளிலும் திருக்குறள் ஆய்வு செய்யப்படுகிறது.

ஈழத்து அறிஞரான க. பொ. இரத்தினம் தமிழ் நாட்டில் திருக்குறளைப் பரப்பும் பணியை நிறையச் செய்து வருகிறார், அந்த வகையில் அவருக்கு அங்கு மிகுந்த மதிப்பும் ஏற்பட்டுள்ளது.

மலையாள தேசத்தில் (கேரளம்) ஞானமடம் என்ற பெயரில் 35 கிராமங்களில் திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள் உள்ளன. சாதி, மத, இன அடிப்படைகளுக்கு அப்பால் ஒழுக்க வாழ்வை இவை ஏற்படுத்தித் தருகின்றன.

### பண்பாட்டின் வேர்களை கண்டறியும் முயற்சி

பரிமேலழகர் உரை தமிழ் நாட்டில் போற்றப்படவில்லை. அது, வர்ணாச்சிரம தர்மத்தைப் பேசுவதே அதற்குக் காரணமாகும். எமது நாட்டைப் பொறுத்தவரை, சமயம் சார்ந்ததாகவே திருக்குறள் பற்றிய பேணுகை இருந்தது. ஈழத்தில் குறள் பற்றிய புரிதல் பரிமேழலகர் உரையினூடாகவே இருந்து வந்துள்ளது. பரிமேலழகர் உரைக்கு ஓர் இலக்கியத் தகுதி உண்டு. அதேவேளை, இலக்சண ஆய்வாகவும் அது உள்ளது.

அவ்வகையில் நமது பண்பாட்டின் வேர்களைக் கண்டறியும் முயற்சியே கலாநிதி மு. கந்தையாவாகத்த இந்நூலாகும். அறிஞர்களை நோக்கி எழுதப்பட்ட பரிமேலழகர் உரையைநெகிழ்த்தி அவர் தந்துள்ளார்.

கல்லைப் பிசைந்து கனியாக்குவது போல இவ்வுரை அமைந்துள்ளது. பரிமேலழகர் வள்ளுவர் உரையை நெகிழ்த்தினார். பரிமேலழகர் உரையை கலாநிதி மு. கந்தையா நெகிழ்த்தியுள்ளார்.

இப்படி அவர் கூறினார்.

இந்த நூலை இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் வெளியிட்டு வைத்து உரையாற்றினார். நூலின் முதற் பிரதியை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக் கொண்டார்.

கவிஞர் இ. முருகையனும் விளக்கவுரை ஆய்வு நிகழ்த்தினார். நூலாசிரியர் பதிலுரை நிகழ்த்தினார்.

(இ-27)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தென்மராட்சியில் நியமனம்

தென்மராட்சி, பெப். 17

தென்மராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளுக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கடந்த 15 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த திங்கட்கிழமை வலய அலுவலகத்தில் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசனால் வழங்கப்பட்டன.

23 பேருக்கு நியமனக் கடிதங்கள் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் ஆறு பேர் இதுவரை தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வலயத்தினால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 102 பேர் தோற்றியதாகவும் நியமனம் பெற்றோரில் பட்டதாரிகளும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# பாதுகாவலர் சங்கம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 17

கடந்த 96ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைதாகி காணாமற் போனவர்களின் மனைவியர்களில் பத்துப் பேருக்கு சுயவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கியூடெக் நிறுவனத்தால் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

தமது கணவர் கைதுசெய்யப்பட்டதை அல்லது காணாமற் போனதை உறுதிப்படுத்தி தமது பகுதிக்கிராம அலுவலரிடம் கடிதம் ஒன்றைப் பெற்று 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மத்தியூஸ் வீதியில் உள்ள 'கியூடெக்' நிறுவனத்திற்குச் செல்லுமாறு கைதுசெய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(இ-10)

# இறுதி ஆண்டுப் பரீட்சை

கொக்குவில், பெப். 17

திறந்த பல்கலைக்கழகத்தில் தொழிலுரிமையும் சிறுவணிக முகாமைத்துவமும் கற்கை நெறி மாணவர்களுக்கான இறுதி ஆண்டுப்பரீட்சை நாளை மறுதினம்சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் புதியநேரம்பகல்10.00 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் நடைபெறும் (இ-69)

# உதயன்

## நம்பிக்கை எவ்வாறு வரும்?

இராணுவத்துக்குப் பதினையாயிரம் பேரைச் சேர்க்கும் அரசாங்கத்தின் முயற்சி, எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. அதனால் நேர்முகப் பரீட்சைத் திகதி அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் மீண்டும் படையில் வந்து சேர்வதற்கு மற்றொரு மன்னிப்புக் காலத்தை அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அந்தக் காலம் அடுத்த வாரமாகும்; 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையாகும்.

இந்தச் செய்திகள் இரண்டும் சொல்வதென்ன?

எவ்வாறேனும் இராணுவத்தின் ஆள்பலத்தை அதிகரித்துப் போரைத் தொடரவே அரசு விரும்புகிறது. ஆனால் சிங்கள இளைஞர்கள் படையில் சேர்ந்து தமது உயிருக்கு ஆபத்துத் தேடிக் கொள்ள விரும்பவில்லை — என்ற சங்கதியே இங்கே வெளிப்படுகிறது.

வருடாந்தமும்; உடனடித் தேவை ஏற்படும் போதும் இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகளை கெடுகெடுவாக நடத்துவது இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. தமிழ்ப் பகுதிகளில் போரை நடத்தத் தொடங்கிய காலத்திலிருந்து இது ஒரு வழமையும் ஆகிவிட்டது.

இனப்பிரச்சினையின் பக்க விளைவான போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் அரசு உண்மையான நாட்டம், அக்கறை காட்டாததால் அது கால வரையின்றி நீடிக்கிறது.

வடக்கு — கிழக்கில் நடைபெறும் போர் வெல்ல முடியாத ஒன்று என்று, சொல்லத் தகுதியுடைய பலரும், பிறபல துறைகள் கூறியும் அதனைக் காதில் போட்டுக் கொள்ள சந்திரிகா அரசு கடந்த ஐந்து வருடங்களாக ஆர்வம் காட்டியதில்லை. அதற்குப் பதிலாக, போரைத் தீவிரப்படுத்தித் தமிழ் மக்களை மென்மேலும் அவலமுறச் செய்ததும், படையினரைப் பெருமளவு எண்ணிக்கையில் இழந்து வருவதும் தான் கண்ட மிச்சமாக உள்ளது.

போனது போகட்டும்; இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில், அரசியல் தீர்வு காணுமாறு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆணை கொடுத்த பின்னரேனும் போரை நிறுத்த அரசு இதுவரை மனங் கொள்ளவில்லையே!

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமல்ல; அரசியல் தீர்வே தேவை என்று ஜனாதிபதி முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை பிறருக்கும் கூறி வருகின்றனர் அதே வேளை, போரைத் தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்!

இராணுவத்தில் தென்னிலங்கை இளைஞர்கள் போதிய எண்ணிக்கையில் சேரவில்லையெனின் கட்டாய ஆள்சேர்ப்புத் திட்டத்தை நடைமுறையாக்கவும் அரசு உத்தேசித்திருப்பதாகச் செய்திகள் வந்தன. இரண்டு நாடுகளுக்கிடையில் போர் நடைபெறுவது போன்ற பாங்கில் அரசாங்கம் தனது இராணுவச் செலவுகளையும் வருடாந்தம் அதிகரித்து வருகிறது. புத்தாயிரமாம் ஆண்டு வரவு — செலவுத் திட்டமும் போரைத் தொடரும் சாயலிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைகளால் அதன் சமாதான முயற்சியில், அரசியல் தீர்வு நடவடிக்கையில் மக்கள் நம்பிக்கை கொள்வதாக இல்லை.

# பாவம் செய்த மக்களின் பயனை அவர்களுக்காக ஏற்ற பரமஹம்சர்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் நினைவு நாள் இன்றாகும்.

**யா**ருடைய ஆன்மிக மனோபாவத்திலும் குறுக்கிடக் கூடாது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி சொல்வது வழக்கம். அதுபோலவே அவர் பக்தர்களிடமும் நடந்து கொண்டார்.

கிரிஷின் மனநிலையை முற்றிலும் அறிந்திருந்த குருதேவர் அதற்கேற்ப அவருக்குப் பயிற்சியளித்தார்.

ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணரின் முன்னிலையில் கிரிஷ் ஏதோ ஒரு விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் தற்செயலாக, ''நான் இதைச் செய்வேன்'' என்று கூறினார்.

இதைக் கேட்டது தான் தாமதம், உடனே ஸ்ரீராமகிருஷ்ணர் குறுக்கிட்டு, இதோ பார். நான் 'இதைச் செய்வேன்' என்று நீ ஏன் சொல்கிறாய்? ஒரு வேளை உன்னால் அதைச் செய்ய முடியாமல் போய்விட்டால் என்ன செய்வாய்? 'கடவுளின் கிருபை இருந்தால் செய்வேன்' என்று சொல் என்று சொல்லி இருவரைத் திருத்தினார்.

கிரிஷும், ''குருதேவர் சொல்வது தான் சரி. என் பொறுப்புகள் எல்லாவற்றையும் நான் கடவுளிடம் கொடுத்துவிட்டேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டு விட்டார். அவர் இது சரியானது; இது நல்லது, என்று என்னைச் செய்யத் தூண்டுவதை மட்டும் தானே நான் செய்ய வேண்டும்'' என்பதை உணர்ந்து கொண்டார்.

அன்று முதல் கிரிஷ், 'நான் இதைச் செய்வேன், அதைச் செய்வேன்' என்ற சொல்லை மட்டுமல்ல; அது போன்ற எண்ணங்களையே விட்டுவிட ஆரம்பித்தார்.

காலம் இவ்விதம் கழிந்தது; ஸ்ரீராமகிருஷ்ணரும் மகாசமாதி அடைந்தார்.

கிரிஷின் வாழ்க்கையில் அலை அலையாக எத்தனையோ சோதனைகள் வந்தன; மனைவி மகன் முதலிய பலரும் காலமானார்கள்.

ஆனால் ஒவ்வொரு சோதனையும் அவரது உள்ளத்தை மேலும்மேலும் உறுதியாக்கவே செய்தது; அவர் தமக்குள் சொல்லிக் கொண்டார் ''இவையனைத்தும் குருதேவரின் திருவுள்ளப்படி தான் நிகழ்கின்றன. இந்தச் சோதனைகள் உன் நன்மையின் பொருட்டே எதிர் வருகின்றன. உன் பொறுப்பை அவரி-



டம் ஒப்படைத்து விட்டாய்- உண்மை; அவரும் அதை ஏற்றுக்கொண்டு விட்டார் - அதுவும் உண்மைதான். ஆனால் இந்த வழியில்தான் உன்னை அழைத்துச் செல்வேன் என்று அவர் உனக்கு எதுவும் சொல்லவில்லையே. எந்த வழி உனக்கு நல்லதோ— அந்த வழியில் அவர் உன்னை அழைத்துச் செல்கிறார். அதற்கு எதிராக 'மாட்டேன்' என்று சொல்லவோ, முணுமுணுக்கவோ உனக்கு உரிமை இல்லை. அப்படி நீ ஏதாவது செய்தால் உன்பொறுப்பை -, என் உன்னையே அவரிடம் ஒப்படைத்து விட்டேன் என்று நீ கூறியது பொய்யாகி விடாதா?''

— இப்படி நாள்கள் செல்லச் செல்ல கிரிஷுக்கு வக்காலத்துக் கொடுப்பது என்பதன் உட்பொருள் தெளிவாகத் தொடங்கியது.

அதை முழுமையாகத் தன் கடைசிக் காலத்திலாவது கிரிஷ் புரிந்து கொண்டாரா? இதைப்பற்றி கிரிஷிடம் பிற்காலத்தில் கேட்டபோது அவர், ''ஆகா'' இன்னும் புரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. வக்காலத்து கொடுப்பது என்பதில் இவ்வளவு ஆழ்ந்த அர்த்தம் இருக்கிறது என்பது எனக்கு அப்போது எங்கே தெரிந்தது! ஜபம், தியானம், தவம் போன்ற ஆன்மிக சாதனைகளுக்கும் முடிவு ஒன்று உண்டு. ஆனால் 'வக்காலத்து கொடுப்பது' என்ற சாதனைக்கு முடிவே இல்லையென்று இப்போது தெரிகிறது. வக்காலத்து கொடுத்தவன் தன்னுடைய சிந்தனை, செயல், பேச்சு அனைத்திலும் ஒவ்வொரு கணமும் விழிப்போடு இருக்க வேண்டும். ஏன், ஒவ்வொரு மூச்சும் இறைவனைச் சார்ந்த நிலையில் விடுகிறோமா. இல்லை, ''நான்'' என்ற அகங்காரத்தால் விடுகிறோமா என்று கண்காணிக்க வேண்டியிருக்கிறது'' என்று கூறினார்.

'வக்காலத்துக் கொடுப்பது' பற்றி பல எண்ணங்கள் நமது மனதில் எழுகின்றன. உலக வரலாற்றைப் பார்க்கும் போது இயேசுநாதர், ஸ்ரீ சைதன்யர் போன்ற மகாபுருஷர்கள் மட்டுமே, ஏதோ ஒரு சிலரின் பொறுப்பை இப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் இவ்விதம் மற்றவர்களுக்கு உதவ சாதாரண குருவால் முடியாது.

### சுவாமி சாரதானந்தர்

''ஆம் உன் செயல்கள் அனைத்தின் பலனையும் ஏற்கிறேன்; உன் தீய செயல்களையும் நான் ஏற்றுக் கொண்டு விட்டேன்'' — என்று தைரியமாக ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் சொல்வதும் அவ்விதம் செய்வதும் நடக்க முடியாது. ஆன்மீக உணர்வு குறையும்போது கருணைக்கடலாகிய இறைவன் அவதாரம் செய்கிறார்; மனிதனின் தீய செயல்களின் பயனை அவனுக்காக அவர் அனுபவிக்கிறார்; தளைகளிலிருந்து மனிதனை விடுவிக்கிறார். இதன் பொருள், அவர் அவனை எல்லா விதமான கடமைகளிலிருந்தும் விடுவித்து விடுகிறார் என்பதல்ல; மனிதன் சிறிதளவாவது முயற்சி செய்யும்படி இறைவன் பார்த்துக் கொள்கிறார்.

'அவதார புருஷர்களின் மகா கருணையினால் பத்துப் பிறவிகளில் அனுபவிக்க வேண்டிய கர்மவினைகளை ஒரு பிறவியால் மனிதன் பெற்று விடுகிறான்'' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்.

பிறரது பாவத்தை இயேசுக் கிறிஸ்து ஏற்றுக் கொண்டதைத் 'தன்னைப் பலியிடுதல்' என்று கிறிஸ்தவ சமயம் குறிப்பிடுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் பின்வரும் இப்படியொரு நிகழ்ச்சி நடந்திருக்காவிட்டால் சாஸ்திரங்கள் கூறும் இந்த உண்மையை நாம் உணர்ந்திருக்க முடியாது.

சிகிச்சைக்காக ஸ்ரீராமகிருஷ்ணர் கல்கத்தாவில் உள்ள சியாம்புகூரில் தங்கியிருந்தார். அப்போது ஒரு நாள் அவருக்கு ஒரு தெய்விகக் காட்சி கிடைத்தது. அதில் அவரது ஸ்தூல உடலிலிருந்து சூட்சும உடல் வெளியே வந்து அங்குமிங்குமாக உலவியது!

அந்தக் காட்சியைப் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறினார். ''அந்தச் சூட்சும உடலின் முதுகு முழுவதும் புண்கள் இருந்தன. 'இப்படிப் புண்கள் மயமாக ஏன் இருக்கவேண்டும்?' என்று நினைத்தேன். பல வகையான பாவங்களைச் செய்து விட்டு வந்து மக்கள் என்னைத் தொடுகிறார்கள்; அவர்கள் வேதனையைக் கண்டு இரங்கி அவர்களின் தீய செயல்களின் பயனை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்தப் புண்கள் தோன்றியுள்ளன என்று அன்னை காளி எனக்குக் காட்டி அருளினாள். இல்லாவிட்டால், பிறகு ஏன் இந்த உடல் எந்தத் தவறும் செய்யாமலிருந்தும் இவ்வளவு வேதனையை அனுபவிக்கிறது?''

இதை ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லக் கேட்டு நாங்கள் வியப்பில் வாயடைத்து நின்றோம். ★

நன்றி:
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்



## சாயி சிந்தனை

கடவுள் எல்லோரிடமும் இருக்கிறார். கடவுள் இல்லாத இடம் இல்லை. சர்வ பூத நமஸ்காரம் கேசவம் பிரதி கச்சதி! யாரையெல்லாம் நீ மதிக்கிறாயோ அது இறைவனையே போய்ச் சேருகிறது! இறைவன் உன்னை விட்டுத் தனியாக எங்கோ விலகியிருப்பதாக எண்ணாதே! கடவுள் உன்னுடன், இருக்கிறார். உன்னுடன், உனக்குமேலே, கீழே உன்னைச் சுற்றி இருக்கிறார். நீயும் கூடக் கடவுளே. நீ வெறும் மனிதப் பிறவி என எண்ணாதே! நீங்கள் எல்லோரும் தெய்வத்தின் திருவடிவங்கள். இந்த இறைவனது அன்பை நீங்கள் அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். ஆகையால் அன்பே கடவுள். அன்பிலேயே வாழுங்கள்.

Start the day with Love
Spend the day with Love
Fill the day with Love
End the day with Love
This is the way to God

துரதிர்ஷ்டவசமாக அத்தனை அன்பும் நம்முள் நமது இதயத்தின் ஆழத்தில் படிந்திருந்தாலும் பயனற்றவர்களாக இருக்கின்றோம். நம்மில் எத்தனை பேர் இந்த அன்பை சமுதாயத்திடம் பகிர்ந்து கொள்கிறோம்? இவ்வாறு அன்பைப் பகிர்ந்து கொள்ளும் போதுதான் நாம் மனிதர்கள் என அழைக்கப்படத் தகுதி பெறுகிறோம். உண்மையில் இந்த அன்பையே உயிர் மூச்சாகக் கொள்ள வேண்டும். அன்பென்பது ஒரு வழிப் பாதையல்ல; அது இரு வழிப்பாதை. கொடுப்பதும், எடுப்பதும், — எடுப்பதும் கொடுப்பதும், என இருக்க வேண்டும். இந்த நாட்டின் மக்கள் இந்தக் குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கோபம், காமம், பேராசை ஆகியவற்றைக் கொல்லவேண்டும்.

(ஆதாரம்:- சனாதனசாரதி)

## நாட்டு மக்கள் நலன் வேண்டி வித்தகத்தின் சிவ மகாயாகம்

தென்மராட்சி, பெப். 17

சாவகச்சேரி வித்தகம் நிலையத்தினர் நாட்டு மக்களுக்கு நலன்வேண்டி சிவ மகாயாகம் நடத்த உள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை மாசி மக தினத்தன்று காலை 5.00 மணி முதல் சாவகச்சேரி வாரிவனநாதர் கோயிலில் இந்த யாகம் நடத்தப்படும்.

இதனையொட்டி இன்று காலை 6.00 மணி முதல் திருமுறைப் பாராயணமும் அகண்ட கிலைபப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

சிவமகாயாகத்தினை 'பிரதிஷ்டா வித்தகர்' சிவஸ்ரீ கி. சோமகந்தராக் குருக்கள் சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் ஆகியோர் நடத்துவர்.

பிரார்த்தனைகளில் சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கம், காவகச்சேரி சாயி சமித்தி வித்தக நிலையப் பிரார்த்தனைக் குழு, கச்சாய் அம்மன் கோயில் பிரார்த்தனைக் குழு ஆகியன கலந்துகொள்ளும். (இ-117)

### நாளை

மாசி 6

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தசி

நள்ளிரவு 12.18 வரை.

நட்சத்திரம்: பூசம்

பிற்பகல் 12.30 வரை.

சுபநேரம்: 6.32—8.02

ராகுகாலம்: 11.02 - 12.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய கணக்கு)

### உதய வாக்கு

குணத்தில் மிக உயர்ந்தவர்கள் அடிமட்டத்திலிருந்து வரும் மாறவே மாட்டார்கள்.

- சிங்கிசன

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

4 ஆம் வட்டாரம் வேலணை கிழக்கைச் சேர்ந்த தங்கரெத்தினம் கோபாலரெத்தினம் என்பவரது தேசிய அ. அ. (இல. 670523470V) யும், விஷேட அ. அ. (இல. 091201021) யும் யாழ்ப்பாணத்திலிருந்து வேலணை ஊடாகப் பயணம் செய்த 780 இலக்க பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(73716)

கந்தசாமித்துரை ரகு ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (603651405V) 13-2-2000 அன்று வல்லிபுரக் கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 34, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும் அல்லது ரவிஅன்ராஜ் சில்க்ஸ் இல. 77, பெரியகடை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(73728)

### விற்பனைக்கு

யமுனாபாறி மறி 3 மாதம் நிரம்பிய குட்டித்தாச்சி, சணல் கடா மற்றும் பொமேரியன் நாய் கறுப்பு நிறம், ஜேர்சி இன கன்று என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- விக்னமூர்த்தி மயூரன், நவாலி அரசடி மகாவித்தியாலயம் அண்மையில்.
(73736)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய 7 இல் செவ்வாயுடைய பட்டதாரி உத்தியோகத்தருக்கு (கேட்டை 22 பாகம்) பொருத்தமான தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு, விள. இல. 1002: பே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.
(73676)

## தேவை

### பைண்டர்
(Binder)

அனுபவமுள்ள கொம்போசிங் செய்யக்கூடிய பைண்டர் தேவை.

இலங்கையன் பதிப்பகம்
(ஸ்ரீலங்கா அச்சகம்)
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(73734)

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**01-03-2000**

- Fabric painting
- Hair style
- Make up
- Bridal make up
- Facial
- Head dress making

இடம்:
**இரத்தினவாசா**
சந்தை வீதி,
உடுப்பிட்டி
(73744)

### நாடகம்

தமிழ்த்தினப் போட்டிக்கு நாடகம் எழுதிப் பழகப் போகின்றீர்களா? 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்களை வாசியுங்கள் 1) நாடகம் எழுதுவது எப்படி? 2) யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50
(73742)

### ஜோதிடம்

கல்வியில் உயர்சித்திபெற, பிரச்சினையற்ற திருமண வாழ்வு, நோய்களைத் துரித கதியில் அகற்றல் ஆகியவற்றுக்கு நாட வேண்டியஇடம் அபூர்வஜோதிட நிலையம், No up - 304, ஆலடிச்சந்தி, கந்தர்மடம். (73688)

### இறைச்சிக் கோழி

Broiler இறைச்சிக்கோழிகள் தேவை. உடன்தொடர்பு கொள்ளுங்கள். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- தனபாலசிங்கம், இல. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(73739)

### புதுவருஷப் பலன்

எங்கும் விற்பனையாகின்றன. 12 இராசிகளின் பலாபலன்கள். வேலணை சோதிடர் V. A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள்.
[73652]

ஆனைக்கோட்டை
சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம்
## பொன்விழா

மேற்படி சனசமூகநிலையத்தின் பொன்விழா 7 - 3 - 2000 நடைபெறவுள்ளதால் அதனை முன்னிட்டு
21 - 02 - 2000 இன்று கரபந்தாட்ட சுற்றுப் போட்டியும், 26 - 02 - 2000 அன்று சைக்கிள் ஓட்டப்போட்டியும், மரதன் ஓட்டப்போட்டியும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
போட்டிகளில் கலந்து கொள்வோரை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்.
மகாத்மா சனசமூக நிலையம்,
சாவற்கட்டு.
(73740)

## கண்ணீர் அஞ்சலி

எமது இலங்கை வங்கி வவுனியாக் கிளை ஊழியர்
திருமதி ஜெயமலர் கெங்காபரத்தின்
பிரிய மைத்துனி
**திருமதி வைத்திலிங்கம் கெங்காரத்தினம்**
அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம்,
இலங்கை வங்கிக் கிளை,
வன்னி மாவட்டம்.

இலங்கை வங்கி,
வவுனியா.
(73747)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 23 - 05 - 1956

உதிர்வு: 02 - 03 - 1996

**அமரர் நாகலிங்கம் இரவீந்திரராசா**
(வணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், முல்லைத்தீவு)
திதி:- பூர்வபக்க திரியோதசி

ஆண்டு நான்கு சென்றாலும் உன்
அன்பு முகம் மாறாதையா
ஆதரவு காட்டி அரவணைத்த சகோதரா— நின்
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள்.
உடுப்பிட்டி வடக்கு. (சி-11048)

### அரசு - தமிழ் கட்சிகள் பேச்சு
# தம்கட்சிக்கு அழைப்பு இல்லாதது குறித்து சந்திரசேகரன் விசனம்

கொழும்பு, பெப். 17
அரசமைப்பு சீர் திருத்த யோசனைகள் தொடர்பாக அரசாங்கம் தமிழ்க்கட்சிகளுடன் நடத்தி வரும் பேச்சுக்களில் தமது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படாதது குறித்து மலையக மக்கள் முன்னணித் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பி. சந்திரசேகரன் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியான மலையக மக்கள் முன்னணியை அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் தொடர்பான பேச்சுக்களுக்கு அழைக்காதது எமக்கு மிகுந்த மனவருத்தத்தை அளித்துள்ளது.

எனவே இனிமேல் நடைபெற உள்ள பேச்சுக்களுக்கு எமது கட்சியையும் அழைக்க வேண்டும்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்துடன் அரசமைப்பு சீர்திருத்தத்துக்கான மலையக மக்கள் முன்னணியின் யோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் பி. சந்திரசேகரன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.
(இ-6)

## மீன்பிடியியல் விரிவுரை

யாழ்ப்பாணம், பெப். 17
யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாவது அரையாண்டுக்கான விரிவுரைகள் யாவும் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

மொத்தமாக ஆறு அலகுகள் கொண்ட மேற்படி கற்கைநெறியின் மூன்று அலகுகள் ஏற்கனவே பூர்த்தியடைந்து விட்டன.

மிகுதி மூன்று அலகுகளான மீனைப் பேணிப்பாதுகாத்தலும் சந்தைப்படுத்தலும், நிர்வாகமும் விரிவாக்கலும், ஒப்படை (ஆய்வுக்கட்டுரை) என்பனவே இரண்டாவது அரை ஆண்டில் நடைபெற உள்ளன. (இ 10)

# வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்கத்துக்குக் கட்டடம்
## பிரதேச சபைத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 17
வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்துக்குக் கட்டடம் அமைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் மூலம் வலி. மேற்குப் பகுதியில் உள்ள பண்டிதர்கள் தமிழுக்குத் தொடர்ந்து தமது சேவையை ஆற்ற முடியும். இதற்குத் தேவையான ரூ. 5 லட்சம் நிதியை ஒதுக்கித் தருவதற்கு யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் யுத்தத்தால் எமது கலை, கலாசார விழுமியங்கள் அழிந்து போக எமது கட்சி ஒருபோதும் அனுமதிக்காது. எமது கலைஞர்கள் தம் திறமைகளை வெளிக்காட்டாது இருப்பது வேதனைக்குரிய ஒரு விடயம்.

ஆகவே அவர்கள் தமது திறமைகளைவெளிக்கொணர்வதன் மூலமே கலை, கலாசாரத்தைக் கட்டி எழுப்ப முடியும் — என்றார்.

கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.
(இ--10)

## செஞ்சிலுவைக் கப்பலில் தபால்கள்

இன்று காங்கேசன்துறைக்கு வரவுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 98 பொதிகள் எடுத்து வரப்படவுள்ளன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 50 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
(இ-10)

## பெறுபேறுகள் விரைவில்

யாழ். பல்கலைக்கழகத்தின் 1997 ஆம் ஆண்டுக்கான கலைமாணி, வணிகமாணிக்கான பரீட்சைப் பெறுபேறுகள் விரைவில் வெளியாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்
திரு. கா. வல்லிபுரம் அவர்களின்
அன்புப் புதல்வி
**செல்வி வ. நிரஞ்சினி**
அவர்கள் 14-02-2000 அன்று அகால மரணம் அடைந்ததையிட்டு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.
வலி. வடக்கு,
தெல்லிப்பழை.
(73750)

# போதுமான 'எக்ஸ்றே' பிலிம் எடுத்துவரப்படவில்லை

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். போதனா வைத்திய சாலை 'எக்ஸ்றே' பிரிவுக்கு இந்த வருடத்துக்கான முதற் கந்தாய எக்ஸ்றே பிலிம் மற்றும் இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றில் ஒரு சிறு தொகுதியே கடந்த வாரம் வந்த செஞ்சிலுவைச் சர்வ தேசக்குழுக் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிலிம் அனுப்பி வைக்கப் பட்டதை அடுத்து தற்போது கிளினிக் நோயாளர்களுக்கும் எக்ஸ்றே எடுக்க ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

எனினும் அனுப்பி வைக்கப் பட்ட தொகை போதாது என்றும்—

வெகுவிரைவில் மிகுதி பிலிம்களும் அனுப்பி வைக்கப் படாவிடில் சிலவாரங்களில் மீண்டும் பாவனையை மட்டுப் படுத்த வேண்டிய நிலை ஏற் படும் எனவும் எக்ஸ்றே வட் டாரங்கள் தெரிவித்தன.

(இ-15)

## அனலைதீவுக்கு மேலதிக மின் இணைப்பு

நெடுந்தீவு, பெப். 17

மின்சாரசபையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று இன்று வியாழக்கிழமை அனலைதீவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

அனலைதீவில் மேலும் சில பகுதிகளுக்கு மின் விநியோகத்தை வழங்குவது தொடர்பாக இவர்களது விஜயம் இடம்பெறுகிறது.

அதேசமயம் அனலைதீவு முதலாம் வட்டாரத்தில் மின் விநியோகக் கம்பிகளை சில விஷமிகள் வெட்டியெடுத்துச் சென்றுவிட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

சுமார் நூறுயார் நீளமான வயர்கள் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப் படுகிறது. (க-111)

## புதிய பாடநூல் தொடர்பான கருத்தரங்கு

திருநெல்வேலி, பெப். 17

தரம் 7 மற்றும் தரம் 10 ஆகியவற்றுக்கான ''தமிழ் மொழியும் இலக்கியமும்'' என்ற புதிய பாட நூல் தொடர்பான வதிவிடக் கருத் தரங்கு பலாலி தேசிய கல்வி நிறுவனத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து தமிழ்ப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்களும், சேவைக்கால ஆலோச கர்களும் இந்தக் கருத்தரங் கில் கலந்துகொள்ள அழைக் கப்பட்டுள்ளார்கள்.

யாழ். கல்வி வலய மொழித் துறை உதவிக் கல்விப் பணிப் பாளர் எம்.எஸ். ஸ்ரீ தயாளன் இந்தத் தகவலைத் தெரிவித் தார். (இ-135)

## நெடுந்தீவில் றுபெல்லா தடுப்பூசி

நெடுந்தீவு, பெப். 17

நெடுந்தீவு மாவட்ட வைத் தியசாலையில் இன்று வியா ழக்கிழமை ஜேர்மன் சின்ன முத்து நோய்க்கான றுபெல்லா தடுப்பு மருந்து ஏற்ற நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

8 வயது முதல் 44 வயது வரையிலான பெண்கள் அனைவரும் அன்றையதினம் காலை 8 மணிக்கும் பகல் 12 மணிக்கும் இடையில்மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்து நோய் தடுப்பு மருந்தை ஏற்றிச் செல்லுமாறு நெடுந் தீவு பொதுச் சுகாதாரப் பரி சோதகர் அறிவித்துள்ளார்.

(இ-111)

## தடுத்து வைக்க உத்தரவு

நெல்லியடி. பெப். 17

பருத்தித்துறை இராணுவ முகாமுக்குள் வைத்துக் குடும் பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல் லப்பட்ட சம்பவம் தொடர் பாக நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்ட இராணுவ லெப்டி னன்ட் ஒருவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை பலாலி யில் உள்ள இராணுவ பொலீஸ் தலைமை நிலையத் தில் பாதுகாப்பில் தடுத்து வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டுள் ளார்.

பொலிகண்டியைச் சேர்ந்த மிக்கேல்பிள்ளை றொபேட் வெலிங்டன் (வயது 33) என் பவரே கடந்த 20-07-98ஆம் திகதியன்று சுட்டுக் கொல்லப் பட்டிருந்தார்.

இவ் வழக்கு விசாரணை கடந்த திங்களன்று பருத்தித் துறை மாவட்ட நீதிமன்றில் எடுக்கப்பட்ட சமயம், குறித்த இராணுவமுகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் விமல்விக்கிரமே (வயது 30) என்பவரை பலாலி இராணுவ பொலிஸ் நிலையசார்ஜன்ட் அபேரட்ண என்பவர் நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தார். (ஐ-109)

## யாழ். மாநகரசபைப் பகுதியில் ஜூஸ் தயாரிப்போர் உரிமம் பெறவேண்டும்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஜூஸ் விற்பனையில் ஈடுபடும் சகல உற்பத்தியாளர்களும் இந்த வருடத்துக்கான உரிமத்தை யாழ். மாநகரசபையிடம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும் என மாநகர சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தயாரிக்கப்படும் ஜூஸ் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடைமுறை அமுலுக் குக் கொண்டு வரப்பட்டுள்ள தாகவும்—அவர் தெரிவித்துள் ளார்.

கடும் கோடை காலம் நெருங்குவதால் ஜூஸ் உற் பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ள தால் இந்த சுகாதார முன் நடவடிக்கை எடுக்கப்படுவதா கத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## காங்கேசன் கைதிகள் பலர் யாழ். சிறைக்கு மாற்றம்

நெல்லியடி பெப். 17

பயங்கரவாத தடைச் சட் டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு, காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்க மறியல் கைதிகள் தற் பொழுது யாழ் சிறைச்சா லைக்கு மாற்றப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம், பருத்தித் துறை, மல்லாகம் மாவட்ட நீதிவான்களின் வேண்டுகோ ளையடுத்தே, இக்கைதிகள் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தற்பொழுது யாழ். சிறைச் சாலை அதிகாரிகள் இக்கைதி களைப் பாரமெடுத்து, குறித்த நீதிமன்றங்களில், வழக்கு விசாரணைக்கு ஆஜர் படுத்தி வருகின்றார்கள்.

இதற்கென சிறைச்சாலை அதிகாரியாக, எஸ். சிவசுந் தரம் என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த ஜன வரி மாதம் களுத்துறைக்கு பயிற்சிக்குச்சென்ற, 13ஆண் பெண், சிறைக்காவலர்களும், கடந்த வாரம் முதல் யாழ். சிறைச்சாலைக்கு நியமனம் பெற்று கடமையைப்பொறுப் பேற்றுள்ளனர். (ஐ-109)

## மாநகரசபைக்கு. தார்

யாழ்ப்பாணம், பெப். 17

அண்மையில் காங்கேசன் துறைக்கு வந்த லங்கா முடித்த கப்பலில் யாழ். மாநகரசபைக்கு 125 பரல் கள் தார் எடுத்து வரப்பட் டுள்ளன. (ஐ-10)

## மலசலகூடம் அமைப்பு

திருநெல்வேலி, பெப். 17

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத் தின் உதவியுடன் இரு மலசல கூடங்கள் நிறுவப்பட்டு வரு கின்றன.

இதேவேளை—

இவ் வித்தியாலயத்தின் முன் மண்டபத்தின் புனர மைப்பு வேலைகள் முடி வடையும் தறுவாயில் உள் ளன. (ஐ-135)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி தெய்வானை வல்லிபுரம்

தாயின் மடியில்: 04-01-1928

இறைவன் அடியில்: 18 01-2000

திதி: 17-02-2000

எமது தாயின் மறைவைக் கேட்டு எங்கள் துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறி, அனைத்து வழிகளிலும் உதவியும் அஞ்சலியும் செலுத்திய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (17-02-2000) வியாழக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தி யேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வ. சிவலிங்கம்
(மகன்)
குருபரன் தொலைத் தொடர்பகம்.

குருக்கட்டு,
கரணவாய்,
கரவெட்டி.

(73681)

## குரு-சிஷ்ய கல்விமுறை அருமையை இன்றையமாணவர் உணரவேண்டும்

### பண்டிதமணி நினைவு விழாவில் பேராசிரியர்

கொழும்புத்துறை. பெப். 17

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையின் அறிவாற்றலை நன்கு தெரிந்து கொண்டவர் கள் அவரது மாணவர்கள். அவருக்கு வாய்க்கப் பெற்ற மாணவர்கள் குரு- சிஷ்ய முறையில் நடத்து கொண் டதை இன்றைய தலை முறை யினர் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் அருமையை உணர்ந்துகொள்ளவும் வேண் டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் வி. கே. கணேச லிங்கம்.

இலக்கிய கலாநிதி, பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை யின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா அண்மையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத் தில் நடைபெற்றது. அதில் 'முத்திரையில் பண்டிதமணி' என்ற நூலை அறிமுகம் செய்து உரையாற்றுகை யிலேயே பேராசிரியர் இவ் வாறுதெரிவித்தார்.

பண்டிதமணியின் புகழ் உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பரவிக் கொள்வதற்கு அவரது மாணவர்கள் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்க தாகும். அந்த வகையிலேயே பண்டிதமணியின் உருவம் பொறித்த முத்திரை வெளி யிடப்பட்டுள்ளது. அத்துடன் ''முத்திரையில் பண்டிதமணி'' என்ற மலரும் வெளி வந்துள் ளது. இவை வெளிவருவதற்கு காரணமாக அமைந்த பண்டி தமணியின் மாணவர் ஆசிரிய மணி பஞ்சாட்சரம் போற் றப்படவேண்டியவர்.

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளைக்கு இளமைப் பருவத் தில் கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டாமற் போய்விட்டது. எனினும் அவரது தந்தையின் விருப்பமும், நண்பரின் ஒத்தா சையும் கல்வி கற்க அவருக்கு உதவியாயின. பண்டிதமணி குரு—சிஷ்ய முறையில் கல்வி பயின்றவர். அக்காலத்தில் ஆசிரியர் கற்பித்தவற்றை மாணவர் தமதுமனத்தில்ஆழ மாகப் பதித்துக் கொள்ளும் பழக்கம் இருந்தது. பண்டித மணியின் கூர்ந்த மதி நுட் பமும் ஆழ்ந்த சிந்தனையும் அவரை உயர்ந்தவராக மதிக்கச் செய்தன. அவரது தமிழ்ப் புலமையை மெச்சியே ''இலக்கிய கலாநிதி'' என்ற பட்டத்தை இலங்கை பல் கலைக்கழகம் அவருக்கு வழங் கிக் கௌரவித்தது. இவ்வாறு பேராசிரியர் தனது உரை யில் மேலும் தெரிவித்தார்

இந்த நிகழ்வில் பண்டித மணியின் சிஷ்யரான ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரத்தின் ஆசிரியப்பணியைப் பாராட்டி ''ஆசிரியர் திலகம்'' என்ற பட்டம் அவருக்கு வழங்கப் பட்டது. தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா இந்தப் பட் டத்தை வழங்கினார்.

ஆசிரியமணிக்குப் பட்டம் வழங்கிக் கௌரவித்ததை ஒட்டி ஈழத்தபத்திரிகையாளர் செல்லப்பா நடராசா தனது உரையில்—

பண்டிதர் சி. கணபதிப் பிள்ளையின் புலமையை மெச்சிய தினகரன் பத்திரிகை அவரைப் ''பண்டிதமணி'' எனப்புகழ்ந்து ஆசிரியத் தலையங்கம் தீட்டியதிலிருந்து அவரது பட்டம் பண்டித மணி என்றே நிலைத்துவிட் டது. அதே தினகரன் பண் டிதமணியின் நிழல் போலத் திரிந்த அ. பஞ்சாட்சரம் ஆசி ரியரை 'ஆசிரியமணி' எனப் பாராட்டி ஆசிரியத் தலையங் கம் எழுதியுள்ளமை குறிப் பிடத்தக்கது. ஆசிரியசேவை யில் இருந்த காலத்திலும் பின்னரும் பாடசாலைக்கும் கல்விச் சமூகத்துக்கும் சேவை யாற்றிவரும் ஆசிரியமணி பஞ்சாட்சரத்தை தவடமராட்சி மக்கள் ''ஆசிரியர் திலகம்'' என பாராட்டியமை மகிழ்ச் சிக்குரியதே என்றார்.

இந்நிகழ்வுகளில் பண்டித மணியின் மாணவர்களின் ஒருவரான மு. கந்தப்பு, ஓய்வுபெற்ற ஆசிரியர் த. சிதம்பரப்பிள்ளை, நெல்லி யடி ம. ம. வித்தியாலய அதி பர் சி. சிற்றம்பலம், தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வ ராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(7-30)

### சுய விதைநெல் உற்பத்தியை மேற்கொண்டு

# பரப்பில் 6 புசல்நெல் உற்பத்தி செய்து

# சங்குவேலி விவசாயிஒருவர் சாதனை

## வயல் விழாவில் பாராட்டு

வலிகாமம் தெற்கு, பெப். 17

யாழ். மாவட்டத்தில் விவசாயத் திணைக்கள தொழில்நுட்ப வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுய விதை நெல் உற்பத்தியை மேற்கொண்ட சங்குவேலி கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் ஒருபரப்பு வயல் நிலத்தில் 6 புசல் நெல்லைப் பெற்றுள்ளார்.

செ ஈஸ்வரன் என்பவரே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலே அதி கூடிய நெல் விளைச்சல் என இதனை விவசாயத் திணைக்களத்தினர் பாராட்டியுள்ளனர்.

விவசாயத் திணைக்களத்தினரால் அறிமுகம் செய்யப்பட்ட ஏ.ரி. 402 ரக இன நெல்லை இவர் தனது வயல் நிலத்தில் பயிரிட்டு அமோக விளைச்சலை இம்முறை பெற்றுள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள உடுவில் விவசாய போதனாசிரியர் பிரிவில் சுயவிதைநெல் உற்பத்தி வயல்விழா நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த வயல் விழா நிகழ்வின்போதே புதியாக இன விதை நெல்லின் விளைச்சல் தெரியவந்தது.

சங்குவேலி கரைப்பிட்டி பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெற்ற இந்தவயல் விழா நிகழ்வினை உடுவில் விவசாயப் போதனாசிரியர் திருமதி ஜெ. சிவசுப்பிரமணியம் ஒழுங்கு செய்திருந்தார்.

இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் விவசாய சேவைகள் திணைக்களமும் விவசாயத்திணைக்களமும் இணைந்து பரீட்சார்த்தமாக மேற்கொண்ட சுயவிதை நெல் உற்பத்தி வெற்றி அளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 13 விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் உள்ள சுமார் 30 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கூடிய விளைச்சலை தரக்கூடிய நெல்லினங்கள் பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்யப்பட்டன.

இந்தப்பயிரினங்கள் யாவும் நல்ல விளைச்சல் கண்டிருப்பதாக விவசாயத் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை இந்த வயல் விழா நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றினார்.

அவர் தனது உரையின் போது கூறியதாவது:

இந்தவருடம் உரிய நேரத்தில் பருவமழை தேவையான அளவில் பெய்துள்ளதால் எமது முயற்சி வெற்றி அளித்துள்ளது. எதிர் காலத்தில் நல்ல விதை நெல்லுக்காக நாம் எவரிடமும் செல்லத்தேவையில்லை. இன்று கிடைத்துள்ள நெல்லைக் கொண்டு ஒவ்வொரு விவசாயியும் எதிர்காலத்துக்கு தேவையான அடுத்த போகத்துக்குத் தேவையான விதை நெல்லைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும் — என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தமது உரையில், வன்னி மண்ணில் நல்ல விளைச்சல் தரக்கூடிய புதிய ரக விதைநெல் தற்போது யாழ்ப்பாண மாவட்ட மண்ணிலும் சிறந்த விளைச்சலைத் தந்துள்ளது. ஓர் ஏக்கருக்கு 144 புசல் விளைச்சல் தரக்கூடிய இந்த நெல்லில் இருந்து யாழ்ப்பாண மண்ணிலும் அதி உச்ச விளைவு பெறப்பட்டுள்ளது எமது முயற்சிக்குக்கிடைத்த வெற்றி ஆகும்.

யாழ்ப்பாண விவசாயிகள் மீண்டும் மீண்டும் ஒரே இன பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்து, எமது தேவைக்கென வெவ்வேறு சிறு தானியப் பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட வேண்டும் — என்றார்.

சங்குவேலி, மானிப்பாய், உடுவில், கந்தரோடை போன்ற பல பகுதிகளைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்களின் அங்கத்தவர்கள் பலர் இந்த விழாவில் கலந்து கருத்துத் தெரிவித்தனர்.

பயிர்களை மாற்றி செய்கை பண்ண விவசாயத் திணைக்களம் தமக்கு உதவி செய்ய வேண்டும் என இவர்கள் கோரினர்.

குறிப்பாக நிலக்கடலை, கௌபி, பயறு, சோளம் போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரவேண்டும் என இவர்கள் கேட்டுக்கொண்டனர்.

வயல் விழா ஆரம்பத்தில், விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாய சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பலரும் இப்பகுதியில் செய்கைபண்ணப்பட்டுள்ள நெல் வயல்களைப் பார்வையிட்டனர்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட அறுவடைக்கருவி, சூடு அடிக்கும் கருவி இயந்திரத்தை உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அங்குகுழுமி இருந்த விவசாயிகளுக்கு இயக்கிக்காட்டி விதை நெல்லைப்பழுதாக்காமல் எப்படி சூடு அடிக்கலாம் என்பதை விளக்கினார்.

சுய விதை நெல் உற்பத்தியின் நோக்கம், சுயவிதைநெல் சேமிப்பு என்பன பற்றி, பாடவிடய அலுவலர்கள் ப. பொன்னையா, கா. நல்லதம்பி ஆகியோர் விளக்கமளித்தனர்.

சங்குவேலி விவசாய சம்மேளன செயலாளர் தி. மகேந்திரராஜா நன்றியுரை கூறினார்.

(இ-152)

# வவுனியாவில் லொறிகள் ஒரே இடத்தில் சோதனை

## காலதாமதம் ஏற்படுவதாக முறைப்பாடு

வவுனியா, பெப். 17

வவுனியாவில் இருந்து வெளிமாவட்டங்களுக்கும், வெளி இடங்களிலிருந்து வவுனியாவுக்கும வரும் லொறிகள் அனைத்தும் கடந்த வாரம் முதல், ஒரே சோதனைச் சாவடியில் நிறுத்திச் சோதனையிடப்படுவதால் வீணான காலதாமதம் ஏற்படுவதாகவும், பொருள்கள் பழுதடையும் நிலை உருவாகி உள்ளதாகவும் வர்த்தகர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வவுனியாவுக்குப் பொருள்களை ஏற்றி வரும் லொறிகள் ஈரற்பெரியகுளம் சோதனைச் சாவடியிலும் —

வவுனியாவில் இருந்து வெளி இடங்களுக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் மதவாச்சி சோதனைச் சாவடியிலும் —

இதுவரை சோதனையிடப்பட்டு வந்தன.

வவுனியாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு நடைமுறைகளைத் தொடர்ந்து அனைத்து லொறிகளும் ஈரற்பெரியகுளம் சோதனைச் சாவடியில் வைத்தே சோதனையிடப்பட்டு வருகின்றன.

அதிக எண்ணிக்கையான லொறிகள் ஒரே இடத்தில் சோதனையிடப்பட்டு வருவதால் வீண் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

முன்னர் காலை 10 மணிக்கு வவுனியாவுக்கு வரும் லொறிகளில் இருந்து பொருள்கள் உடனடியாகவே கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. ஆனால் தற்போது மாலை 5 மணிக்கே லொறிகள் சோதனையின் பின் வவுனியா வந்தடைவதாகவும் —

இந்தக் காலதாமதத்தால் லொறிகளில் உள்ள பொருள்கள் பாதிப்படைவதாகவும் —

வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் பி.எஸ். அப்துல்லாவிடம் வர்த்தகர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து அவர் வவுனியா இணைப்பு அதிகாரி பிரிகேடியர் சித்த ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த விடயம் குறித்து விசாரணை செய்த பிரிகேடியர் பொதிகளுடன் வவுனியாவிலிருந்து தென்பகுதி செல்லும் லொறிகள் மாலை 5 மணி வரை பயணம் செய்யவும் —

வெற்று லொறிகள் எந்த நேரமும் தென்பகுதிக்குப் புறப்படவும் அனுமதி வழங்கினார்.

காலதாமதத்தால் ஏற்படும் சிரமத்தை நீக்க மேலதிக படையினரைச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-8)

## கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு, பெப். 17

வைதிக கிரியைகள் பற்றிய கலந்துரையாடல்கள் உடுவில் சிவ ஞானப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பமாகி நடைபெற உள்ளன. ஆர்வமுள்ள அந்தணர்கள் இதில்பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

(இ-158)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்

வலிகாமம் தெற்கு, பெப். 17

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

ஆங்கில பாட பகுதிநேர ஆசிரியர்களாக நியமனம் பெற விரும்புவோர் வலிகாமம் கல்வி வலய அலுவலகத்தில் அல்லது வலயத்துக்கு உட்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களில் இருந்து இதற்குரிய விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி இம் மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் வலய அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-152)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 16 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(110585 ஏ), (110585பி), (123262 ஏ), (123262 பி), (123262 சி), (127959 ஏ), (127959 பி), (127959 சி), (127959 டி), (127999 ஏ), (127999 பி), (129995 ஏ), (129964 ஏ), (129964 பி), (129993 ஏ), (131236 ஏ), (131242 ஏ),

(131266ஏ), (131268ஏ), (131269ஏ), (131283ஏ), (131283பி), (131283சி), (131308ஏ), (131312ஏ), (131312பி), (131312சி), (131315ஏ), (131315பி), (131372ஏ), (131372பி), (131384ஏ), (131384பி), (131397ஏ), (131397பி), (131398ஏ), (131398பி), (131424ஏ), (130517ஏ), (130517பி), (130533ஏ), (130550ஏ), (131431ஏ), (131431பி), (131431சி), (131431டி), (131444ஏ), (131464ஏ), (131465ஏ), (131465பி), (134879ஏ),

### கரவெட்டி

(125803ஏ), (125803பி), (125803சி), (125803டி), (131114ஏ).

### பளை

(129371ஏ), (129374ஏ), (131882ஏ), (131884ஏ), (131884பி), (131889ஏ), (131889பி).

### பருத்தித்துறை

(131161ஏ), (132467ஏ), (132467பி), (132467சி), (132467டி), (135106ஏ).

### கூட்டுறவு ஊழியருக்கான

# புதிய சம்பள அதிகரிப்பை அமுல் செய்யக் கோரிக்கை

சண்டிலிப்பாய், பெப். 17

வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கான புதிய சம்பள அதிகரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் பண்டத்தரிப்புக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கக் கிளையின் தலைவர் சி. மகேந்திரன் தலைமையில் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவரும், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளருமான பொ. கனகரத்தினம் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

தற்போது 8—12 சத வீதமாக உள்ள ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவை 10—15 சத வீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற தீர்மானம் உட்பட மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (இ-135)

## மனையியல் பயிற்சி நெறி

வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவில் நடத்தப்படும் இந்த வருடத்துக்கான மகளிர் அபிவிருத்தி மனையியல் பயிற்சி நெறி பண்டத்தரிப்பு சந்தைக்கு சமீபமாகவுள்ள கட்டடத்தில் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏ. வி. துரையப்பா தலைமையில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் அதிகாரி வி கனகரத்தினம், நிர்வாக உத்தியோகத்தர் எஸ். செல்வராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். 40 யுவதிகள் இங்கு பயிற்சி பெற்று வருகின்றனர். (இ-135)

### பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு

# நிரந்தர வைத்திய அதிகாரியை நியமிக்குமாறு கோரிக்கை

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு யாழ். சுகாதார சேவை, பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது தொல்புரம் அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வாரத்தில் மூன்று நாள்கள் இந்த வைத்தியசாலைக்கு வந்து நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்.

இதேவேளை, காடாப்புலத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக் கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளதை அடுத்து கடந்த 7 ஆம் திகதி பால் காய்ச்சும் சமயாசார நிகழ்வு நடத்தப்பட்டது.

சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலாளர் ஆ. மகாலிங்கம் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் இவ்வைத்தியசாலை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவரும், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ச. செல்வரத்தினம் தெரிவித்தார்.

(இ-135)

## இலவச ஆங்கில வகுப்பு

பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம் பிரான்பற்று கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி இலவச ஆங்கில வகுப்பை ஆரம்பித்துள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் இந்த வகுப்பில் தரம் 5 தொடக்கம் தரம் 9 வரையில் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி இலவசமாகக் கற்பிக்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் சி. மகேந்திரன் தெரிவித்தார்.

(இ-135)

Sivamayam

# WEDDING INVITATION

**Mr. & Mrs. Navaratnam**
"Navamathy"
Kachchai Road,
Chavakachcheri.

**Mr. & Mrs. K. Ramachandran,**
63, Chetty Street Lane,
Jaffna.

*Request the pleasure of your company on the marriage of*

Our Son
**SHANTHAN**
(Cheief Computer Engineer
University of Oslo)

Our Daughter
**GNANAGOWRY**
(B.Sc. Special)

***On Sunday the 20 th February 2000 between 11.30 a.m and 12.30 p.m. at High Gate Temple 200 A, Archway Road, London, NL5B6 and to Lunch thereafter.***

27, Jubilee Road,
Perivale, Greenford,
Middelsex,
HB67HY
Tel: 01819985470

40, Afriston Avenue,
North Harrow,
Middlesex,
HAQ7EF
Tel: 01814276599

(C/11046)

# யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாணப் பொருள்களை கொழும்புக்கு 'குமண' கப்பலில் அனுப்புவோரது கவனத்துக்கு!

பெப்ரவரி மாத இறுதிக் கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குமண கப்பல் கொழும்புக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் பொருள்களைக் கொண்டுசெல்ல விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.


- **இங்கிருந்து அனுப்பும் பொருள்களின் பெயர், அதன் அளவு போன்ற விவரங்களையும், அத்துடன் பொருள்களை பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.**
- **உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட மரக்கறிவகைகள், வெங்காயம் போன்ற பழுதடையக்கூடிய பொருள்களுக்கு ஒரு CBM/MT இற்கு ரூபா.575 ஐ கொழும்பு, பருத்தித்துறை துறை முகங்களில் ஏற்றி இறக்கற் கையாளற் கட்டணமாக செலுத்தவேண்டும்.**
- **பழுதடையாத உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு CBM/MT இற்கு ரூபா.2,000 ஐ கொழும்பு, பருத்தித்துறை துறைமுகங்களில் கப்பல் கட்டணம், ஏற்றி இறக்கற் கையாளற் கட்டணமாக செலுத்தவேண்டும்.**
- **கட்டணங்கள் யாவும் யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையிலேயே முற்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் பணம் செலுத்தினால் மாத்திரமே பருத்தித்துறையில் பொருள்களை ஏற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.**

**எனவே பொருள்களை ஏற்ற விரும்புபவர்கள் பொருள்களின் விவரம் மற்றும் சரியான அளவையும் குறிப்பிட்டு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

*அரசாங்க அதிபர்*
*யாழ்ப்பாணம்*

(C/11053)

# SPORTS GOODS
## JUST ARRIVED



- Badminton Racquets
- Shuttle Cock
- Carrom Seeds
- Chess Boards
- Tennis Ball Bats
- Cricket Balls
- TT Sets
- Badminton Sets
- Carrom Board
- Carrom Discs
- Chess Seeds
- Tennis Balls
- T T Ball
- TT Bats

**and many other Sports items**
*Also available*
*Your Favourite Coffee*

**BENCAFE**
INSTANT COFFEE MIX

# ARUNS SPORTS SPOT

347, Kasthuriyar Road, Jaffna.

(C/11045)

# கல்விப் பணிப்பாளர்கள் நேற்றுக்கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ். மாவட்ட பாடசாலைகளில் காணப்படும் கட்டடத்தேவைகள் மற்றும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த கல்விப்பணிப்பாளர்களும் நேற்று மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் உள்ள - மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரின் - தற்காலிக அலுவலகத்தில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் கட்டடத் தேவைகளை ஆராய்ந்து ஆறு வருட அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து அந்த காலப்பகுதிக்குள் அவற்றைப் பூர்த்தி செய்தல் -

குறிப்பாக மலசலகூடங்களைப் புதிதாக அமைப்பதற்கு முன்னுரிமை அளித்தல் -

ஒவ்வொரு வலயத்துக்கும் தனித் தனியே சகல வசதிகளையும் கொண்ட அரங்குகள் அமைத்துக் கொடுத்தல் -

மற்றும் பாடசாலை மாணவர்களிடையே கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்துதல் -

ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் மற்றும் பரீட்சைகளை மாவட்ட நிலையில் நடத்துதல் -

போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாக மேலதிக மாகாணப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

எதிர்வரும் 28ஆம் திகதி மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்களுக்கான கூட்டம் கொழும்பில் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும் -

அந்தக் கூட்டத்தின் போது நேற்றைய கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் கல்விச் செயலரின் கவனத்துக்கு கொண்டுவரப்படும் என்றும் -

அவர் தெரிவித்தார். (உ-9)

## கிரனேட் வீச்சு!

நேற்றிரவு 8.00 மணியளவில் கோப்பாய் சந்திப் பகுதியில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அதனையடுத்து ஓரிரு வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. மேலதிக சேத விவரங்கள் தெரியவரவில்லை. (உ-73)

## சூட்டுக்கு இலக்கானார்

ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு முகாமில் நேற்று தற்செயலாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமுற்றதாகத் தெரிவித்து அந்த அமைப்பின் உறுப்பினரான ஜேசுதாஸன் அருள்ராஜன் என்பவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-15-139)

# மரண அறிவித்தல்கள்

விஸ்வப்பிரம்மஸ்ரீ

## மு.முத்துக்குமாரு இரத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மு.முத்துக்குமாரு இரத்தினம் 16.02.2000 புதன்கிழமை காலமானார்.

அன்னார் முத்துகுமாரு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், அம்பிகைபாகன், அச்சுதபாகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அமரர் முத்துலிங்கம், கந்தசாமி, அமரர் அமிர்தம்மா, அமரர் தங்கராசா தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் இராசம்மா, அமரர் செல்லம்மா, ஆகியோரின் பெறாமகனும் அமரர் கந்தையா, அமரர் கிருஷ்ணசாமி, அமரர் சீராளபிள்ளை, வடிவேலு - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும் அமரர் இராசம்மா, அமரர் மயில்வாகனம், சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் மங்கையர்க்கரசி, பிரியதர்சினி, கலாபரன் இராஜபவானி, மனோகரவாசன், பத்மாவதி, நிர்மலா, திரிபுரவாசன், தில்லைவாசன், சக்திவேல், சண்முக தாஸ், ஞானவேல், கிருஷ்ணவேணி, வேணுகோபால் ஆகியோரின் மாமனாரும் அமரர் மதியாபரணம், அன்னலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் சிறியதந்தையாரும் சுந்தரதாஸ், சாவித்திரி, சிவமணி, ரகு ஆகியோரின் பெரிய தந்தையாரும் சிவஞானம், சரஸ்வதி, செல்லத்துரை, திரவியம்மா, அமரர் பொன்னுத்துரை, வேலாயுதம், கந்தசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2000) வியாழக்கிழமை பி.பகல் 3மணிக்கு நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல

பத்திரகாளிகோயிலடி
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

**இ.அம்பிகைபாகன்** (மகன்)
**இ.அச்சுதபாகன்** (மகன்)

(73771)

## பொன்னம்பலம் கந்தசாமி

(ஓய்வுபெற்ற அதிபர், சென்.ஜோசப் மகா வித்தியாலயம்)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் கந்தசாமி (வித்துவான் பொன் கந்தசாமி) அவர்கள் நேற்று (16.02.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்புக் கணவரும் கமலாதேவி, பராசக்தி, கிருஷ்ணசாமி (விற்பனையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்), சிவஞானசுந்தரம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2000) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் மாதகல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மாதகல் வடக்கு,
மாதகல்.

**க.கிருஷ்ணசாமி**
(மகன்)

(73769)

## திருமதி இராசரத்தினம் அருட்செல்வநாயகி

வியாபாரி மூலை, பருத்தித்துறையைச் (தலைவாசல் வீடு) சேர்ந்த அருட்செல்வநாயகி அவர்கள் (11.02.2000) வெள்ளியன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.சி.க.வயித்திலிங்கத்தின் பாசமிகு மகளும் க.இராசரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், ஸ்ரீசண்முகானந்தா வித்தியாசாலை, சாவகச்சேரி) அவர்களின் அன்புமிகு மனைவியும் காலஞ்சென்ற மதுரவாணி மற்றும் திருமதி கலைவாணி பாலசுந்தரம் ஆகியோரின் சிறிய தாயாரும், ஜெயானந்தசிவம் (ஜெயந்தன்), சிவநாராயணதாஸ் (சிவா) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் காலஞ்சென்ற அமிர்தநாயகி, கந்தசாமி, அன்டேர்சன் பிளாட்ஸ் கொழும்பில் இருக்கும் அருந்தவநாயகி துரைசாமிப்பிள்ளை, காலஞ்சென்ற குமரசேகரம் வயித்திலிங்கம்பிள்ளை ஆகியோரின் இளைய சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.02.2000) வெள்ளிக்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகம்புளியடி வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

ஸ்ரீசண்முகானந்தா வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

**திரு க.இராசரத்தினம்**
(கணவர்)

(C/11056)

# படையினர் வீசிய ஆயுதங்களை எடுத்து விற்ற மூவர் கைது!

வன்னியில் விடுதலைப் புலிகள் நடத்திய ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கையின் போது தப்பியோடிய படையினர் வவுனியாவில் வீசிச் சென்ற ஆயுதங்களை எடுத்து, விற்பனை செய்ததாகக் கூறப்படும் மூன்று சிங்கள இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் தற்பொழுது வவுனியாவில் உள்ள 211ஆவது பிரிகேட்டில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

ஹுட்டம்பஹுங்கடுவ என்ற இடத்தைச் சேர்ந்த ஹுத்தரேகே பிரியந்த அஸிக்குமார, ரன் பண்டாகே நிஹுால் ஷெல்டன், கப்புறு காமினிகே சரத் ஆகிய மூன்று சிங்கள இளைஞர்களே இது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். (உ-5-164)

## ஆனையிறவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பின்னர் அப்பகுதியில் விடுதலைப்புலிகளின் 12 சடலங்களையும் பதினான்கு ரி-56ரகத் துப்பாக்கிகளையும் தாம் கண்டெடுத்ததாகவும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இந்தச் சண்டையில் படையினர் தரப்பில் 20 பேர் பலியானதாகவும், 18 படையினர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

ஏழு பாதுகாப்பு அரண்களிலிருந்த படையினர் தப்பி ஓடிவிட்டதாகவும் 'புலிகளின் குரல்' அறிவித்தது.

தமது தரப்பு இழப்புக் குறித்து 'புலிகளின் குரல்' எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. (உ-5-8)

## தமிழகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பயணம் செய்த வள்ளங்களையும் மீன்பிடி உபகரணங்களையும் கைப்பற்றியதாக தமிழகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கொச்சின் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.(உ-7)

## குடாநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த விற்பனை நிலையக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதென குடாநாட்டு விவசாய சம்மேளன அதிகாரிகளும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய அதிகாரிகளும் இணக்கம் கண்டுள்ளனர்.

அரச அதிபர் கே.சண்முகநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கம் காணப்பட்டது.

யாழ்.மாவட்ட களஞ்சியங்களில் உள்ள வெங்காயத்தை திருமலை கொண்டு சென்று ஒப்படைக்க தனியார் நிறுவனமான ஜெசிபா ஏஜென்சி முன்வந்துள்ளதாகவும் -

இதற்கான ஏற்றி - இறக்கல் கட்டணமாக ஒரு கிலோ வெங்காயத்துக்கு 11ரூபா வழங்குவதென அவர்களுடன் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## கடத்தப்பட்டார்

நவாலிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத குழுவினரால் செவ்வாய் காலை 6 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார். நவாலி வடக்கு மகேசன் வீதியைச் சேர்ந்த நடராஜா சுகுமார் (வயது 45) என்பவரையே கார் ஒன்றில் வந்த 7 பேர் கொண்ட குழுவிசாரித்துவிட்டு விடுதலை செய்வதாகக் கூட்டிச் சென்றதாக அவரது மனைவி சுகுமார் கமலாதேவி சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## உண்ணாவிரதம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வரும் கைதிகளின் உறவினர்கள் மற்றும் தென்பகுதியிலுள்ள பத்திரிகையாளர்கள் சிலரும் வன்னிக்குச் செல்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5-164)


## தரிசனம் இலங்கை - 2000

இன்னிசை நற்செய்திக் கூட்டம்!

சுகமளிக்கும் ஆராதனை!!

இன்னிசைக் குயில் - சகோதரி எஸ்தர் பேபி
(சின்னஞ்சிட்டுக் குருவியே - புகழ்)

சுவிசேஷ இடிமுழக்கம் - சங்கை ஜெயச்சந்திரன்

அன்பின் செய்தி - சங்கை டாஸன் சாம்சன்

மற்றும் பலர்

'வியாதியஸ்தலர்களுக்கான விசேட ஜெபங்கள்'

இடம் - மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகம்.

காலம் - இன்று (17-02-2000) வியாழக்கிழமை மாலை 3.00 மணி.

'யாவும் இலவசம்! யாவரும் வருக!!'

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கின்றேன்"- இயேசுகிறிஸ்து -(யோவான் 14:6)

கானான் ஜெபஆலயம்
இருபாலை.

(C/11042)



## விரிவுரைகள் ஆரம்பம்

கல்வியாண்டு 2000/2001இன் முதலாவது பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம். வாரஇறுதி நாள் வகுப்புக்களுக்கான விரிவுரைகள் 20.02.2000 (ஞாயிறு) அன்றும், வாரநாள் வகுப்புக்களுக்கான விரிவுரைகள் 21.02.2000 (திங்கள்) அன்றும் ஆரம்பமாகின்றன என்பதை அறியத்தருகின்றோம்.

* புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மேற்படிப் பிரிவுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

இயக்குநர்,
I.I.S.

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11037)



## DCSஇன் புலமைப்பரிசில் திட்டம் 2000/2001

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 19.02.2000 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தகுதி பெற்ற மாணவர்களுக்கான அழைப்பிதழ்களை எமது கீழ்வரும் கிளை அலுவலகங்களில் பெற்றுத் தங்கள் வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

வடமராட்சி மாணவர்களுக்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்பு:- மேற்படி புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கான கற்கை நெறிகள் 04.03.2000இல் ஆரம்பமாகவுள்ளதால் பதிவுகளை 22.03.2000க்கு முன்னர் மேற்கொள்ளவும். A/L 2000 மாணவர்களும் மேற்படி பதிவுகளை குறித்த திகதியினுள் மேற்கொண்டு தங்கள் கற்கை நெறிகளை A/L பரீட்சை முடிவடைந்த பின்னர் ஆரம்பமாகும் புதிய பிரிவில் தொடரலாம்.**

Director
DCS

124/2, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

M.M.V. வீதி,
நெல்லியடி,

(73749)



## ஷோபனா தொலைத் தொடர்பகம்

மிதிலை, ஞானவைரவர் ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு - உரும்பிராய்.

*உள்ளூர் இல: 070 213023*

*வெளியூர் இல: 0094-70-21-3023*

16.02.2000இல் இருந்து சேவையை ஆரம்பித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:-

* உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

* உங்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்கள் குறித்து உடனுக்குடன் உங்கள் இருப்பிடங்களுக்கு அறியத்தரப்படும்.

*உங்கள் தேவையே!*
*எங்கள் நிரந்தர சேவை!*

*விளம்பர அன்பளிப்பு:-*

பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம். (73745)



## இன்றைய வீடியோ C.D வெளியீடு

*நாசர் , பானுப்பிரியா*
நடித்த
**அன்னை**

பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதி 325/=

ஆர்க் வீடியோ லைபிறறி,
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11057)



## எமது வீடியோ C.D வெளியீடுகள்

* *அன்னை*
* *நாகதேவதை*

ஒரிஜினல் வெளியீடுகள்

* *வெற்றிச்செல்வன்*
* *காகித ஓடம்*
* *ஆடி வெள்ளி*

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(C/11058)



இலங்கையின் தரக்கட்டுப்பாட்டு முத்திரையுடன் விற்பனையாகின்றது 'சீமன்ஸ் தயாரிப்புக்கள்'.

## இலங்கை மக்களின் செழிப்பான கூந்தல்களுக்கு உத்தரவாதமளிப்பது

TOTAL SRILANKAN HAIR CARE

## சீமன்ஸ் கிங் கோகோநட் ஒயில்

## SEIMENS "KING" COCONUT OIL

*(நறுமணம் ஊட்டிய செவ்விளம் தேங்காய் எண்ணெய்)*

குடாநாட்டில் போலியாக பெட்டிகளை அச்சிட்டு போலி எண்ணெய்கள் விற்பனையாவதால் தரச்சின்னத்தை உறுதிப்படுத்தி கொள்முதல் செய்யுமாறு வேண்டுகிறோம்.

தயாரிப்பாளர்கள SEIMENS BROTHERS, UE5 PEOPLE'S PARK COMPLEX COLOMBO - 11. FAX: 941-437369

*குடாநாட்டுக்கான ஏகவிநியோகஸ்தர்:* சீவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 2567 (73766)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் உடற் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளருமான த. அருணகிரிராஜாவின தந்தையார்

## வடிவேல் தங்கராஜா

(உடுப்பிட்டி கிராம முன்னேற்றச் சங்க முன்னாள் தலைவர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது அஞ்சலியையும் தெரிவிக்கின்றோம்.

அரசடி நண்பர்கள்,
யாழ். இந்துக்கல்லூரியடி.

(C/11059)

## மரண அறிவித்தல்

### திரு. தம்பிஐயா சண்முகநாதன்

(மின்மானிப் பரிசோதகர்,
இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிஐயா சண்முகநாதன் 15.02.2000 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் பவானியின் அன்புக் கணவரும் தனுஷியா, எழில்குமரன் (லண்டன்), செந்தூரன் (சோபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பரமசாமி - சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, பத்மநாதன், யோகராஜா, கமலா, பத்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ருத்திரானந்தாவின் (ருத்தி - கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.02.2000) வியாழக்கிழமை பொரளை மன்னம்பெரி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு கனத்தை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

01, கனகரட்ணம் வீதி,
அரியாலை

12, Harmers Place Off,
Harmers Ave.,
Colombo - 6
T.P: 586112, 592482

தகவல்:
த.பத்மநாதன்
த.யோகராஜா.

(73765)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.